உ

கணபதி துணை.

# மண்ணிப்படிக்கரைப் புராணம்.

திருவாவடுதுறை ஆதீனத்து மஹாவித்துவான்
திரிசிரபுரம்

## ஸ்ரீ மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள்

இயற்றியது.

இது,
ஷை ஆதீனத்தலைவர்களாகிய
ஸ்ரீமத்

## அம்பலவாணதேசிகரவர்கள்

விருப்பத்தின்படி
இந்நூலாசிரியர் மாணாக்கரும்
சென்னை, பிரஸிடென்ஸி காலேஜ் தமிழ்ப்பண்டிதருமாகிய
உத்தமதானபுரம்

## வே. சாமிநாதையரால்,

நூதனமாக எழுதிய
அரும்பதவுரையுடன்


சென்னை:
பிரஸிடென்ஸி அச்சுக்கூடத்திற்
பதிப்பிக்கப்பெற்றது.

பிலவங் ௵ சித்திரைமீ.
1907.
விலை அணா - ௮.



Copyright Registered.

மண்ணிப்பு
4831
4831
MAHAMAHOPADHYAYA Dr. U. V. SWAMINATHAIYAR LIBRARY, MADRAS.

# இப்புத்தகத்திலடங்கியவை.

க. முகவுரை.

உ. தேவாரம்.

௩. நூல்.

ச. அரும்பதவுரை, பக்கம் - கூ௩.

ரு. சூசீபத்திரம், பக்கம் - எஉ.

# முகவுரை.

மண்ணிப்படிக்கரையென்பது, சோழவளநாட்டிற் காவிரிமாநதியின் வடக்கேயுள்ள பாடல்பெற்ற சிவஸ்தலங்களுள் ஒன்று; பண்டைக்காலத்தில் மண்ணியாற்றின் படிக்கரையிலிருந்தமையின், இஃது இத்திருநாமம் பெற்றது. மிக்க அருகேயோடியமண்ணியாறு இத்திருக்கோயிலைச் சிதையாதபடி பலநூற்றாண்டுகளுக்குமுன்பு ஒதுக்கி வெட்டிவிடப்பட்டதெனவும் அதுகாரணத்தால் இத்தலம் பழமண்ணிப்படிக்கரையென்று வழங்குமெனவும் சொல்லுவர்; தேவாரத்தில், இத்தலம், "பழமண்ணிப்படிக்கரை" என்று கூறப்பெற்றிருத்தலும் இவ்வுண்மையை விளக்கும். இதனால், ஸ்ரீசுந்தரமூர்த்திநாயனார் காலத்திற்குமுன்னமேயே மண்ணிநதி ஒதுக்கப்பெற்றதென்று தெரிகின்றது. இருப்பைப்பட்டு அல்லது இலுப்பைப்பட்டு, மதூகவனமெனவும் இதன்பெயர் வழங்கும்; [பட்டு - ஊர்; மதூகம் - இருப்பைமரம்.]

இத்தலத்திற்குரிய விநாயகமூர்த்திகள் இருவர்:

க. வலம்புரிவிநாயகர். உ. நடனவிநாயகர்.

ஸ்வாமி, ஐந்துமூர்த்திகளாக எழுந்தருளியிருக்கின்றனர்; அவர்கள் திருநாமங்கள்:

க. படிக்கரைநாயகர். ச. பரமேசர்.
உ. நீலகண்டேசர். ரு. மகதீசர்.
ங. முத்தீசர்.

அம்பிகைகள் இருவருளர்; அவர்கள் திருநாமங்கள்:

க. மங்கலநாயகி. உ. அமுதகரவல்லி.

**தீர்த்தங்கள் மூன்று:**

க. பிரமதீர்த்தம். ங. கொள்ளிடம்.
உ. மண்ணியாறு.

ஸ்தலவிருக்ஷம், தெய்வவிருப்பை.

**வழிபட்டுப் பேறுபெற்றோர்:** பிரமதேவர், பஞ்சபாண்டவர் முதலியோர்கள்.

இத்தலத்தைச்சார்ந்தஸ்தலம், நாகபுரமென்பது. அவ்வூர், இக்காலத்து மணல்மேடென்று வழங்கப்படுகின்றது. அதில்,

ஸ்வாமியின்திருநாமம்.....................நாகலிங்கம்.
அம்பிகையின்திருநாமம்..................சுந்தரவல்லி.
தீர்த்தம்....................................நாகதீர்த்தம்.
விருக்ஷம்....................................புன்னை.

வழிபட்டுப் பேறுபெற்றோர் ஆதிசேடன், தௌமியமுனிவர் முதலியோர்.

இதனை வடமொழி முதனூலிலிருந்துபெயர்த்து இனியசெய்யுள்நடையாக இயற்றியவா, திருவாவடுதுறை ஆதீனத்து மஹாவித்துவானாகிய திரிசிரபுரம், ஸ்ரீமீனாட்சிசுந்தரம்பிள்ளையவர்கள். இந்நூலை இயற்றுவித்தோர், ஷை ஆதீனததுவித்துவானும் அதனைச்சார்ந்த சிவக்ஷேத்திர குருக்ஷேத்திர பரிபாலகநிர்வாககர்களில் தலைமைபூண்டொழுகி விளங்கியவருமான ஸ்ரீகனக சபாபதிமுனிவரென்பவர். செய்வித்தகாலம், இற்றைக்குச் சற்றேறக்குறைய ௪0 - வருடங்களுக்கு முந்தியது.

நூலாசிரியர்பெயரைக்கேட்கவே யாவருக்கும் இந்நூலின்பெருமை நன்குவிளங்குமாதலின், அதனைவிரித்தெழுதுதல் மிகையென்று இங்கே நிறுத்துகின்றேன். ஆனாலும் அனுபவசித்தமாதலின், ஒன்றைமட்டும் எழுதும்படி என்மனம் தூண்டுகின்றது; அஃதாவது, படித்துக்கொண்டிருக்கும்பொழுது வேறொன்றில், படிப்போருடைய ஞாபகத்தைச்செலுத்தவொட்டாமற்செய்து மற்றநூல்களிலும் இந்நூல் நயம்படத்தோன்றுமென்பதே.

தம்முடைய ஆதீனவித்துவானாலியற்றப்பெற்றதும் செவ்வியதும இவ்வரியநூலைப் பலர்க்கும் பயன்படும்படி அச்சிற்பதிப்பித்து வெளிப்படுதும்வண்ணம் செய்வித்த, திருவாவடுதுறையாதீனத்தலைவாகளும் வித்வஜ்ஜன பரிபாலகர்களுமாகிய ஸ்ரீமத் அம்பலவாணதேசிகரவர்களுடைய பெருந்தகைமையும் அன்புடைமையும் ஒருபொழுதும் மறக்கற்பாலனவல்ல.

### வெண்பா.

எணணிப் படித்திடவே யின்றமிழிற் ரொல்கதைதான்
மண்ணிப் படிக்கனைக்கு வாய்த்ததே - நண்ணுதமிழ்க்
கந்தரமோ வென்னக் கவிமழைபெய் மீனாட்சி
சுந்தரநா வல்லோன் சொல.

சென்னபட்டணம்
28-4-07.

இங்ஙனம்
வே. சாமிநாதையன்.

# மண்ணிப்படிக்கரை.

## ஸ்ரீசுந்தரமூர்த்திநாயனார்

### தேவாரம்.

### பண் - நட்டராகம்

திருச்சிற்றம்பலம்.

முன்னவ னெங்கள்பிரான் முதல் காண்பரி தாயபிரான்
சென்னியி லெங்கள்பிரான் *றிரு நீல மிடற்றெம்பிரான்
மன்னிய வெங்கள்பிரான் மறை நான்குங்கல் லாணிழற்கீழ்ப்
பன்னிய வெங்கள்பிரான் பழ மண்ணிப படிக்கரையே.

அண்ட கபாலஞ்சென்னி யடி மேலல ரிட்டுநல்ல
தொண்டங் கடிபரவித் தொழு தேததிநின் றடுமிடம்
வெண்டிங்கள் வெண்மழுவன் விரை யார்கதிர் மூவிலைய
பண்டங்கன் மேயவிடம் பழ மண்ணிப் படிக்கரையே.

ஆடுமி னன்புடையீ ரடிக் காட்பட்ட தூளிகொண்டு
சூடுமின் றொண்டருள்ளீ ரும ரோடெமர் சூழவந்து
வாடுமிவ் வாழ்க்கைதன்னை வருந் தாமற் றிருந்தச்சென்று
பாடுமின் பத்தருள்ளீர் பழ மண்ணிப் படிக்கரையே.

அடுதலை யேபுரிந்தா னவை யந்தர மூவெயிலுங்
கெடுதலை யேபுரிந்தான் கிள ருஞ்சிலை நாணியிற்கோ
ணடுதலை யேபுரிந்தா னரி கான்றிட்ட வெச்சில்வெள்ளைப
படுதலை யேபுரிந்தான் பழ மண்ணிப் படிக்கரையே.

உங்கைக ளாற்கூப்பி யுகந் தேத்தித் தொழுமின்றொண்டீர்
மங்கையொர் கூறுடையான் வா னோர்முத லாயபிரா
னங்கையில் வெண்மழுவன் னலை யாரகதிர் மூவிலைய
பங்கய பாதனிடம பழ மண்ணிப் படிக்கரையே.

---

* ஸ்வாமியின் திருநாமம்.

MAHAMAHOPADHYAYA
Dr. U. V. SWAMINATHAIYAR LIBRARY

செடிபடத் தீவிளைத்தான் சிலை யார்மதிற் செம்புனஞ்சேர்
கொடிபடு மூரிவெள்ளை யெரு தேற்றையு மேறக்கொண்டான்
கடியவன் காலன்றன்னைக் கறுத் தான்கழற் செம்பவளப்
படியவன் பாசுபதன் பழ மண்ணிப் படிக்கரையே.

கடுத்தவன் றேர்கொண்டோடிக் கயி லாயநன் மாமலையை
யெடுத்தவ னீரைந்துவா யரக் கன்முடி பத்தலற
விடுத்தவன் கைநரம்பால் வேத கீதங்கள் பாடலுறப்
படுத்தவன் பால்வெண்ணீற்றன் பழ மண்ணிப் படிக்கரையே.

திரிவன மும்மதிலு மெரித் தானிமை யோர்பெருமா
னரியவ னட்டபுட்ப மவை கொண்டடி போற்றிநல்ல
கரியவ னான்முகனு மடி யும்முடி காண்பரிய
பரியவன் பாசுபதன் பழ மண்ணிப் படிக்கரையே.

வெற்றரைக் கற்றமணும் விரை யாதுவிண் டாலமுண்ணுந்
துற்றரைத் துற்றறுப்பான் றுன்ன வாடைத் தொழிலுடையீர்
பெற்றரைப் பித்தரென்று கரு தேன்மின் படிக்கரையுட்
பற்றரைப் பற்றிநின்று பழி பாவங்க டீர்மின்களே.

பல்லுயிர் வாழுந்தெண்ணீர்ப் பழ மண்ணிப் படிக்கரையை
யல்லியந் தாமரைத்தா ரா ரூர னுரைத்தமிழ்
சொல்லுதல் கேட்டல்வல்லா ரவர்க் குந்தமர்க் குங்கிளைக்கு
மெல்லியு நன்பகலு மிடர் கூருத லில்லையன்றே.

திருச்சிற்றம்பலம்.

கணபதிதுணை.

# மண்ணிப்படிக்கரைப்புராணம்.

## கடவுள் வாழ்த்து.

### வலம்புரிவிநாயகர்.

*மாமேவு வலம்புரியி னருள்பெருக வத்துவித மாண்பார் முத்தி*
*நாமேவு வகையளிப்போ முமக்குயிர்கா ளெனத்தெரிக்கு நலமே மானத்*
*தூமேவு வலந்தழுவ மதம்பெருக நாசியொடாந் துதிக்கை கொண்ட*
*வோமேவு வலம்புரிக்குஞ் சரத்தினிரு தாட்கமல முன்னி வாழ்வாம்.* (௧)

### படிக்கரைநாயகர்.

*த்த தாமரைப்பூ வுரியானுங் கரியானு நெடிய வானத்*
*பூத்த மற்றோரு முற்றோரும் பெருவரங்க ளிறைஞ்சி யெய்தக்*
*பூத்த விருப்பைவன விருப்பைவன மெனப்புரிவோன் கலைநி லாவிற்*
*பூத்த முடிக்கரைகொள் படிக்கரைநா யகன்மலர்த்தா டலைமேல் வைப்பாம்.*

### நீலகண்டேசர்.

*தூயமறை யாகமங்க ளொருசிவமே பிரமமெனத் தூற்றக் கேட்டு*
*மாயவனா தியபசுக்கள் பிரமமென வுழல்பசுக்கண் மயக்கந் தீர்ப்பா*
*னேயமிகு கருணையினா னீலகண்டே சுரனெனும்பேர் நிறுவி மேன்மே*
*லாயவள மதூகவனத் தமருமொரு பெருவாழ்வை யடுத்து வாழ்வாம்.* (௩)

### முத்தீசர்.

*மூண்டபெருங் காதலினாற் றவமுயலும் பல்லுயிர்க்கு முத்தி நல்கு*
*மாண்டகைமற் றொருதானே யென்றுணர முத்தீச னாய நாமம்*
*பூண்டவா வளமலியு மிருப்பைவனத் தினிதமரும் புராணப் புத்தேள்*
*காண்டகைய சேவடித்தா மரைமலர்மேல் விரைமலர்தூய்க் கனிந்து வாழ்வாம்.*

### பரமேசர்.

*அரையேறு தோலுழுவைக் கஞ்சாது முரட்குரங்க மங்கை தாவப்*
*புரையேறு விடவரவிற் கஞ்சாது முடிமதியம் பொலிந்து லாவ*
*வுரையேறு திருமேனித் தழற்கஞ்சா திதழிமது வுறைப்ப நாளும்*
*விரையேறு மதூகவனத் தமர்பரமே சனைப்பணிந்து விரும்பி வாழ்வாம்.* (௫)

### மகதீசர்.

ஒப்பாரு மிக்காரு மில்லானென் றாரணங்க ளுரைத்தற் கேற்ப
விப்பாரும் விண்ணுலகு மெடுத்தேத்து மகதீச னெனும்பேர் பூண்டு
தப்பாரு மறிவினருஞ் சங்கையறத் தழலங்கைத் தலத்தி னேந்திக்
கப்பாரு மதூகவனங் குடிகொண்ட பெருமானைக் கருதி வாழ்வாம். (௬)

### மங்கலநாயகி.

இருவருநம் பெருமான்றன் கண்ணிருபா லுந்தழுவி யிருத்தற் கேற்ப
வொருவருமற் றவர்மனையார் தங்கணிரு பாலுமரீஇ யுவப்பு மேவ
வெருவருமற் றனையானை யுருவிடத்து மபிரியாமன் மேவி யார்க்கும்
பொருவருமங் கலமளிக்கு மங்கலநா யகிமலர்த்தாள் போற்றி வாழ்வாம். (௭)

### அமுதகரவல்லி.

ஓங்குபுகழ்ப் பெருங்கணவன் கரத்தமர்ந்து கந்தரத்தி னொளித்த நஞ்சந்
தீங்குபுரி யினுமதனை மாற்றுமருந் தெனவமுது நிறைநீர வைப்பில்
வீங்குமுயிர்ப் பொருட்டமைத்த தென்னவுங்கைத் தலத்தமுத மேவக்கொண்டு
பாங்குபெறு மமுதகர வல்லியெனும் பெயர்படைத்தாள் பாதம் போற்றி. (௮)

### சபாநாயகர். வேறு.

நாடுதற் கெடுத்த சிந்தை நைந்துமா லுணங்க கொள்ளப்
பாடுதற் கெடுத்த மூவா யிரவரும் பற்றிப் போற்றிக்
கூடுதற் கெடுத்த வன்பிற் குலவமா தேவன் மன்று
ளாடுதற் கெடுத்த பாத மல்லது கதிவே றுண்டோ.

### சிவகாமியம்மை.

தண்ணிய கடல்சூழ் வைப்பு முதலிய தானந் தோறுங்
கண்ணிய வுயிர்க ளெல்லாஞ் சிவத்தினைக் காமுற் றெய்த
வண்ணிய தாயே யாமுந் தருணட மமைய நோக்கும்
புண்ணிய மலர்ப்பூங் கொம்பைப் போற்றிவாழ்த் தெடுத்தல் செய்வாம். (௧௦)

### தக்ஷிணாமூர்த்தி. வேறு.

மூலவா னவந்தப முனிவர் நால்வரு
மூலவா யமங்கரத் தேந்தி மொய்வட
மூலவாஞ் சையினமர் நோக்க ணுற்புய
மூலவா சிரியனை முன்னி யேத்துவாம். (௧௧)

### வயிரவக்கடவுள்.

மறைகமழ் பரிகல மலர்க்கை யேந்துபு
கறைகமழ் பிச்சைதேர் கடவு ளாட்டினை
நறைகமழ் கமலமெந் நாளும் பூத்திடு
முறைகமழ் தராதவென் மனத்து முற்றியே. (௧௨)

### நடனவிநாயகர். வேறு.

பொங்குபல் லுயிரு மீன்ற புனிதையார் திருக்கண் சாத்தப்
பொங்குமா னந்தக் கூத்துப் புரிதரு பிரானு முள்ளம்
பொங்குமா தரவி னோக்கப் புவியெலாங் கரப்ப வோங்கிப்
பொங்குநீர் நடிக்கூத் தாடும் புகர்முகக் களிற்றை யுள்வாம். (௧௩)

### முருகக்கடவுள்.

திரைதரு கடலிற் றோற்றுந் தெய்வதப் பெண்ணை வேட்டுப்
புரைதரு காட்டு வாழப் புக்கமா னணங் கொள்ள
வரைதரு பெண்ணை வேட்டு வரையெலாங் காணி கொண்ட
விரைதரு கடப்பந் தண்டார் வேலவற் கன்பு செய்வாம். (௧௪)

### திருநந்திதேவர்.

மதலையந் தொடைசூழ் வேணி வாணிலா வெறிப்ப வைகு
முதலைமுற் கண்டு வைகு மொய்ம்பினாற் பிரமன் கொங்கைத்
திதலையந் திருவாழ் மார்ப னாதியர் செறிந்து நாளும்
விதலையி றனைமுற் காணா விளங்குநா யகன்றாள் போற்றி. (௧௫)

### அகத்தியமுனிவர்.

உமைமிக வொருத்தி யுள்ளா ளுலோபாமுத் திரையே யன்னா
ளமைமிக ரொருத்த னுள்ளா னலத்தமிழ் முனியே யன்னா
னிமையவ ரறிமி னென்னா வெங்கையே யருளிச் செய்யக்
கமைமிகு தவப்பே றுற்றார் கழலிணைக் கன்பு செய்வாம். (௧௬)

### திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

கொன்மணங் கஞற்றுந் தெய்வத் தாமரைக் குடிகொள் செம்மல்
பொன்மணம் புணர்ந்தோ னாதிப் புலவர்தங் குழாமே மாறத்
தன்மணங் காண வந்தார் யாரும்வீ டென்னுந் தைய
னன்மணம் புணரச் செய்த நாயகற் கன்பு செய்வாம். (௧௭)

### திருநாவுக்கரசுநாயனார்.

சூலத்தைத் தோளி லேற்றுஞ் சுடுதழ னஞ்ச முண்டு
நீலத்தைக் குமைக்கு மேனி நெடுங்கரி வணங்கக் கண்டுஞ்
சீலத்தை யுடையா ரேத்துஞ் சிவபெரு மானே யென்னக
கோலத்தைக் கொண்ட செம்மல் குளிர்மலர்ப் பாதம் போற்றி. (௧௮)

### சுந்தரமூர்த்திநாயனார்.

நீண்டவ னின்னுந் தேறா நின்மலக் கமலப் பூந்தா
ளாண்டவன் கொண்ட வாறே யடியருங் கொண்டா ரென்னப்
பூண்டவன் புடைய மாத ரிருவரைப் புணர்ந்து மேவு
மூண்டவன் புடைய நம்பி பதமலர் முன்னி வாழ்வாம். (௧௯)

### மாணிக்கவாசகசுவாமிகள்.

அளவரும் வருத்த மெய்தி யனைவரு மடிமை யாகுந்
தளவரும் பனைய மூரற் றையலோர் பாகன் றானே
வளவருங் கூடை கட்டி மண்சுமந் தடியும் பட்டுப்
பிளவரு மடிமை கொள்ளப் பெற்றவர்க் கடிமை செய்வாம். (உ0)

### சண்டேசுரநாயனார். வேறு.

அறத்தை நோக்கி யரிய தனைப்புடை
திறத்தை யுற்ற கரஞ்சிதை யாதுபால்
புறத்தை யுற்றிடப் போக்கிய தாள்சிதைஇ
நிறத்தை யுற்ற நிமலனைப் போற்றுவாம். (உக)

### அறுபத்துமூவர்.

வஞ்ச மாதி மருவிய தேனுமென்
னெஞ்ச மோர்புடை நின்றுற வாழ்வரா
னஞ்ச மார்பர னற்பதப் பால்கவ
ரஞ்ச மாய வறுபத்து மூவரே. (உஉ)

### பஞ்சாக்கரதேசிகர். வேறு.

கோலமார் துறைசை மேவுங் குருநமச் சிவாய தேவன்
சீலமார் கருணைச் சித்தர் சிவப்பிர காச ரன்று
ஞாலமார் தரவ குத்த வறைநயந் திருத்த லாலே
நீலமார் கொடிய நாயே னெஞ்சறை யகத்தும் வைகும். (உங)

### அம்பலவாணதேசிகர்.

இன்னியற் புலவ ரேத்து மெழிற்பெருந் துறைசை நாளு
மன்னியற் கருணை மூர்த்தி யம்பல வாண வள்ளல்
பொன்னியற் கமல பாதம் புன்மையேஞ் சென்னி மன்னிப்
பின்னியற் சிந்தை புக்க பெயர்தரி னினைக்க லாகும். (உச)

### மற்றைச்சிவநேசர்கள்.

பண்ணவர் புகழு மண்ணிப் படிக்கரைப் பெருமான் மேய
கண்ணகன் றளியிற் றொண்டு புரிதரு கடப்பாட் டோரு
மெண்ணமக் கடவுட் பூந்தாட் கியைத்திடு மற்றை யோரு
நண்ணுதற் கிடங்கொ டுக்கு நாயினே னுள்ள மாதோ. (உரு)

---

## ஆக்குவித்தோர். வேறு.

வானளவு புகழ்த்திருவா வடுதுறையிற் குருநமச்சி வாயமூர்த்தி
யானபர சிவனருளான் ஞானகலை முதற்பிறவு மமையக் கற்று
மோனமிகு சாத்தியனாய் மிளிர்கனக சபாபதிமா முனிவர் கோமான்
கூனன்மதி முடித்தபிரான் மதூகவனப் புராணநீ கூறு கென்ன. (க)

## அவையடக்கம்.

அன்னவன்றன் மொழிமறுத்தற் சஞ்சியறி விலிநாயே னளவா மேன்மை
பின்னியவம் மதுரகவனப் புராணவட மொழியைமொழி பெயர்த்து நாளு
மின்னிசைய தென்மொழியாற் பாடுதலுற் றேன்மறுவந் திலையு மேனுந்
துன்னியமெய் யறிவுடையார் மதிமறுவிற் கொள்வரெனுந் துணிபான் மன்றே.

### வேறு.

நீடுபே ரறிஞர் தம்பா னிரப்பிய செவியி லோர்நீ
பாடுபா வுறுமோ வென்று படிக்கரை நாதர் கேட்பி
னாடுவான் கங்கை தங்கு நல்லதின் முடிமேன் மண்ணே
ராடுநீ ருறுவ தென்னே யென்பன்மற் றவரென் சொல்வார். (௩)

## சிறப்புப்பாயிரம்.

முன்னுசீர்ப் பிரமன் மாயோன் முதலிய பெருவா னுடர்
பன்னுசீர் வளஞ்சான் மண்ணிப் படிக்கரைப் புராணஞ் செய்தான்
மின்னுசீர் முகில்வி ராவுஞ் சிராமலை மேவி வாழ்வோன்
றுன்னுசீர்த் தமிழ்மீ னுட்சி சுந்தர நாவ லோனே.

ஆகத்திருவிருத்தம் - உ௬.

# திருநாட்டுப்படலம்.

குணகடல் குமரி யாறு குடகம்வேங் கடமென் றிந்நான்
கணவிய வெல்லை யாக வமைந்ததென் றமிழ்நா டென்னு
மணமலி கூந்த லாட்கு மாமதி முகமே யாகிப்
புணர்தரு சோழ நாட்டின் வளஞ்சில புகல லுற்றும். (௧)

### பொதுவளம்.

அண்ணலா ரினிது மேய வருட்பெருஞ் செய்ஞ லூர்பூங்
கண்ணகன் புகார்தென் னுரூர் கோழியொண் கருவூ ரென்னு
மெண்ணமை நகரோ ரைந்து முடிபுனை யிடமாக் கொண்ட
புண்ணிய வளவர் செங்கோற் பொலிவுடை யதுநீர் நாடு. (௨)

பாலியும் பெண்ணை யாறும் பரந்தெழு பொருநை யாறும்
வாலிய வுள்ள நாட்டின் வரம்பயில் பொன்னி யாறு
கோலிய நாடு தொன்றே குளிர்புன லுடைன் றேர்பே
ராலிய வமையு மென்னி னதன்சிறப் பெனைத்தா ராயின், (௩)

### மழைவளம்

தமமையூ ரிறைவன போறறத தழைநதமா தியாக ராசா
செமமைசே ராரூா யேவித திகழதரு சோழ நாடடை
வெமமைதீர த ளிபபா மெனறு விழைநதெழூ மேச மெலலா
மூமமைமீ ரூகநது மாத ரூமமழை பொழியா நிறகும (௪)

### காவிரிநதிவளம்

மழைவளம வறநத போதும ொாதரு மருவி யாய
விழைவள மரூது நலகும விணடவழ குடுமி யோஙக
வுழைவள மழைய ரூது பொழிகலா இயிாக ளுயயத
தழைவள மலியும பொனனித தடநதி பெருகா நிறகும (௫)

வெணமலா பணியிற சூழப பொஙிதரு விணடோய குனறங
கணடில ரிமயக குனறங கடுககுமக குனற நினறுங
தணமலா குணததிற ரேனறித தனாமிசைப பரவும பொனனி
பணமல ரமூதத திஞசொற பாயபுக ழூழை யா ணேரும (௬)

வளையினின் றிழிநது நாளு மலாதரு பொலிவிற றூகி
விளைபல வமையத தாஙகித தாதுமே தகவின மலக
விளைபல வணடு மொயபப விளஙகு வளாவித தணணெ ன
றுளைபுகழப பொன்னி நனனீ ரலரெனற கொபப மேவும. (௭)

பலவுயி ருதிதது வாழும பணபினூற புவன மாகி
நலலபோ தகஞசெ றிநத நனமையின னாரி யாகி
யொலலையி லெஙகும பாயு முணமையி னமபு மாய
தெலலையின மணிகள வாரி யெறிநதுலாம பொனனி ரீததம. (௮)

தளைமட மகட்கு வானா தவழவளை செனனி யாகப
புளையதி னினறும போதும பொனனியொ னகணட மாக
வுளையதி னிருகூ றூகி யொருகுரீ தொடிககை யாய
களைதரு மிதனூற பாணி யெனறனா கறறு ளாரே (௯)

விளம்புமக கரங்க ணினறும விரலபல கிளைத்தா லெனன
வளமபடு மரிசி லென்று மஃிபுனன முளளி யெனறு
மூளம்பிணை மணணி யெனறு முவைமுத லாக வெணணில
வளமபயி னதிகள பலல விரணை ரூறு கிளைதத மாதோ. (௧௦)

### மணணியாறு

மொழிதரு குடிஞை யாய பலவுளு முருகப புததேள
பொழிதரு கருணை யாலே யழைததிடப போநத மணணி
வழிதரு வெளள மேனமை வகுபபவா யாவ ரனனோன
செழிதரு முருவுஞ சீரு மெனசசிறந தோஙகு நாளும. (௧௧)

மண்ணிமுற் குடிஞரு நீத்த மதகுக டொறும்பு குர்ந்து
தண்ணிய பெருங்கா லேறிச் சாற்றருஞ் சிறுகால் புக்குப்
பண்ணிய வயல்க ளெல்லாம் பாய்ந்தன வளவைக் கேற்பப்
புண்ணிய வளவைக் கேற்பப் புராரித னருள்பாய்ந் தென்ன. (௧௨)

## உழுதொழில் முதலியன.

மருவிய சோழ நாட்டின் வண்புக ழிதுவே யென்னப்
பொருவில்பல் கழனி தோறும் புக்கதண் புனலை நோக்கி
வெருவரு நாஞ்சி லேர்க்கால் வியனுகம் பகடு பூட்டி
யொருகையிற் றூர்க்கோல் வாங்கி யுழுதொழின் முயன்றார் மள்ளர். (௧௩)

குடதிசை யிருந்து நேரே குணதிசைச் செல்ல வுய்த்தும்
வடதிசை யிருந்து நேரே தென்றிசை மருவ வுய்த்துந்
தொடர்படைச் சாலெ ருங்கப் புன்முத றுலைந்து மாய
வடர்கருஞ் சேறு செய்தார் மைகுழைத் தென்ன வம்மா. (௧௪)

தவலரும வரம்பி றெருக்கந் தவாதுகய கரிந்து மீதிட்
டவலொடு மேடு தீரச் சமம்பரம் பதனு லாக்கிக்
கவலருஞ் செம்மை வெண்மை நென்முளை களிற்றி யானைச்
சுவலிறை தன்னை வாழ்த்தித் தொழுதுவித் தினர்செய் தோறும். (௧௫)

வயலெனுந் தாழி தம்முள வளவிய நறுநீ ரென்னு
மியலுறு பசுநீர் தேக்கி யினியநென் முளைக ளென்னுஞ்
செயல்கொள்வெண புடைவை யேய்த்துத் திகழ்தரப பசப்ப தோர்ந்தே
யுயலுற வந்நீர் பாய்ச்சுந் தொறும்பசப் புயாந்த தன்றே. (௧௬)

நிறைபெருஞ் சாயந் தோய்ந்த நிகழ்பசுங் கலைக ளெல்லா
மறைவிலவ் விடத்தி னின்றும் வாங்கிப்பல் லிடத்துய்ப் பார்போற்
குறையறு பருவம் வாய்ந்த நாறுகோ தறப்ப றித்து
முறைபல கழனி தோறு நடுவரான் முயன்று மள்ளர். (௧௭)

பதுத்தபன் முதலுங் கட்டுப் பட்டதோர் மெலிவி னாலே
மதித்தவவ் விடத்துச் சற்று வாட்டமுற் றதுபோற் சாய்ந்து
திதித்தநீர் பாய்த லாலே சிறப்புற நிமிர்ந்த பின்ன
ருதித்தபல் களையுந் தோன்றி யுடனிமிர்ந் தெழுந்த மாதோ. (௧௮)

## களை கட்டல்.

களைகளை பருவ நோக்கிக் கடைஞர்த மேவல் போற்றி
வளைகெழு தளிர்க்கை மாத ரணமென வயலுட் புக்குத்
தளையவிழ் கமலங் கொய்வார் தம்முகம் புனற்கண் டின்னு
முளையெனத் தெறக்கை நீட்டிக் காணுறு தொளித்த தென்பார். (௧௯)

எங்கடஞ் செய்ய வாயோ டகலிய கழுநீர் யாங்கள்
வெங்கொலை புரிதற் கஞ்சி விகசியா தொடுங்கக் கண்டு

முங்கடம் வலிமை யென்னே யொண்கம லங்கா ளெங்க
டிங்கள்வாண் முகங்கள் கண்டு மலர்ந்துளீ ரெனச்சி வப்பார். (உ0)

இன்னபோ திதுவாய் மூடி யிருத்தலை நம்ப வொண்ணு
துன்னமென் னடையீர் நாகீத் தகன்றிடிற் சிவந்து தோன்று
முன்னமே யடனன் றென்று முருக்கினர் கழுநீர் முற்றும்
பொன்னவிர் சுணங்கு பூத்த பூண்முலை யுழத்தி மாரே. (உக)

புக்கில்பெற் றுறையு மாயிற் புண்டரீ கத்தோ டாம்பன்
மிக்கபல் சிறப்பு மேவு மேதினி யொருங்க வாவுந்
தொக்கநெற் பயிரி லாய துச்சில்பெற் றமர்த லாலே
நக்கதம் பெருமை தீர்ந்து நலிதர லுற்ற வன்றே. (உஉ)

உரியநல் லிடத்து மேவி னும்பர்கோ னயன்மா லேனோர்க்
கரியவன் முடிமே லேறு மம்புயங் கழுநீ ராதி
யுரியநல் லிடந்தீர்ந் திங்ஙு னுறைதலா லிழிந்த சாதி
யரியமர் தடங்க ணல்லா ரடித்துவைப் புண்ட மாதோ. (உ௩)

களைகளை தொழிலி னின்றார் கையகப் பட்ட மீனும்
அளைபுகு குளிரு மற்று மாயிடை யகலக் கொள்வார்
விளைதரு மிவைகண் மேவில் வேட்டபல் புள்ளுங் கூடி
வளைதரப் பயிரைச் சாய்த்து வருத்துமென் றுணர்ந்தார் போல. (உ௪)

### பயிரின் விளைவு.

வறுமைநோய் மடியி லாநுண் மதியினன் கல்வி போலத்
தெறுகளை பலவுந் தீர்ந்த பயிரெலாஞ் செழிப்புற் றோங்கி
யுறுகருச் சுமந்து காலத் தொருங்குற வீன்று தாறு
மறுகுற முதிர்ந்து காய்த்து விளைந்தன வயல்க டோறும். (உ௫)

### நெல்லரிதல்முதலியன.

அரிதரும் பருவ நோக்கி வேதின மங்கை வாங்கி
விரிதரு திண்டோண் மள்ள ரரிந்துமென் மேலுஞ் சாய்த்துப்
புரிதரு நாணிற் கட்டிப் பொலிகளஞ் சுமந்து சேர்த்துப்
பரிதரு மேரு வென்னப் பற்பல போர்கள் செய்வார். (உ௬)

உடலுயிர் பிரிக்குங் கூற்றி னோங்குபல் போருஞ் சாய்த்துக்
கடல்பரந் தனைய தாய கருங்கடாப் பிணைத்து மேல்விட்
டடலுற நடத்தி வைக்கோ லகற்றிநெற் குவித்துத் தூற்றி
விடல்படா தளவு கண்டு வேந்தனுக் குரிமை நல்கி. (உ௭)

மறையவ ராதி யோர்க்கு வழங்குவ வெறுப்ப வீசிக்
குறையறு மெச்சம் வாரிக் கொண்டுபோய் மனையி லுய்த்து
முறைகொடென் புலத்தா ராதி மொழிந்தபல் வகையா ரோடு
நிறைமகிழ் திளைப்பத் துய்த்து நிரம்பிவாழ் குடிக ளெங்கும். (உ௮)

கந்திநல் வளங்கொள் வாருங் கதலிநல் வளங்கொள் வாரும்
பந்தியி னமைந்த தேமாப் படிபல வளங்கொள் வாரு
நந்திய மஞ்ச ளிஞ்சி நகுபல வளங்கொள் வாரு
முந்திய கருப்புக் கட்டி முதற்பல வளங்கொள் வாரும். (உ௯)

இவர்பலர் துவன்றி நாளு மிணையில தாகி நன்மா
தவர்பலர் நெருங்கக் கற்ற சான்றவர் செறியப் பொன்செய்
பவர்பலர் பொலிய நாளும் பண்புசால் சோழ நாடாய்
குவர்பலர் சொலப்புக் காலுங் குறைவுறா தியானென் சொற்றேன். (௩0)

## திருநாட்டுப்படலம் முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் - ௩௯.

# திருநகரப்படலம்.

பண்டுதவம் புரிந்தவரே பண்பினமர் வதற்கிடமாய்த்
தொண்டுபுரி பெருந்தகையார் துறப்பரிய தூய்மையதாய்க்
கண்டுமகிழ் தரவெவருங் காதலிப்ப தாய்ச்சிறக்கும்
வண்டுமுரல் பொழில்புடைசூழ வளமண்ணிப் படிக்கரையே. (௧)

### ஊர்சூழ்சோலை.

வெயிலுறுத்த தழற்குடைந்து மெலிவொடுமுட் புகுந்தவர்கள்
பயிலுறுத்த மற்றதையே பாராட்டக் குளிர்துவற்றுங்
குயிலுறுத்த கூக்குரலுங் கொழுஞ்சுரும்ப ரோதையுங்கார்
மயிலுறுத்த நடமுமறா வானளவு பெருஞ்சோலை. (உ)

இத்தகைய வளஞ்சான்ற வெண்ணிலகிளைப் பெருஞ்சோலை
மொய்த்தசெழு மலரிலுள முருகுவிரி நறுந்தேனிற்
கத்தகைய தருமலர்த்தேன் கைப்பதனு லளிமுசா
வுத்தமருந் தெய்வமான் மியமென்பா ருளைப்பதெவன். (௩)

### தடாகங்கள்.

கோகநகம் புண்டரிகங் குவளைகை ரவமாம்பன்
மாகவின்மற் றிவைமுதற்பன் மலர்துவன்றி மணமெழுந்து
நாகருல கொடுதிசையோ ரெட்டினுநண் ணுறவிடுத்து
மோகமிகப் பொலிவனவான் மொய்த்தபுனற் றடம்பலவும். (௪)

மோதியலை யெறியநறு முளரியலை தருதடத்துக்
காதியுகள் கயலெறியுங் காமரனம் பலபுகுந்து
சோதிமறை தரமூழ்கித் துளைந்துகலக் குவவளவா
வோதிமமோர் தடம்புகுந்தாங் கொருங்குகலக் குதல்வியப்பே. (௫)

ஆடுவன மாஞ்சோலை யணிமயில்க ளதற்கிசையப்
பாடுவன பிரமரங்கள் பார்ப்பதற்கா யிடைவந்து
கூடுவன மகளிர்குழாங் குறித்தவர் தமக்குமகிழ்
நீடுவன மனமுவகை நிரப்புவன முகிலவைக்கே. (௬)

## வாய்க்கால்கள்.

மண்ணிநதி யிடைக்கிளைத்து வருகால்கண மலர்சுமந்து
நண்ணியபல் லிடத்துமினி துறவிளைத்து நயந்துவலம்
பண்ணியமை தியினெழுகும் பார்புகழத் திருநகரம்
புண்ணியநற் றலமென்று புந்திகுறித் ததுபோலும். (௭)

வாரணமொன் றிந்நகரில் வலம்புரியென் றுரைத்திடுநம்
பேரமையப் பூணுதலால் யாமுமதன் பெயர்பூண்டாஞ்
சீரமைய வென்றுலவித் திரிதல்போ லொலிக்கும்வளை
நீரமைசெய் தொறுமுலவி நித்திலங்கள் பலவுயிர்க்கும். (௮)

காலுநுழை யாதபடி கருஞ்சோலை புடையுடுத்து
மேலுமிகக் கவிழ்ந்துநக ருட்பொதிய மேவுதலான்
மாலுமனப் பகைஞருணர்ந் திடர்வயக்கா விடமிதிது
சாலுமருச் சனைக்கென்றே தங்கினு ரைவர்களும். (௯)

இனமுடுத்த வானவர்கண் ணேறுபடா வகைமாற்றக்
கனமுடுத்த பூஞ்சோலை கவிழ்ந்துமூ டுவதானு
மனமுடுத்த காலோடை யருகுசூழ் தலினுனும்
வனமுடுத்த நகரென்றே வையமிரட் டுறமொழியும். (௧௦)

## மாடங்கள். வேறு.

வான நாடன் மகன்வழி பாடுசெய்
ஞான மாதல நண்ணி லவன்புரி
யூன மில்லையென் றோங்க லமர்தல்போ
லான மாட மளவில வோங்குமே. (௧௧)

மலைகண் மாளிகை யாய்ப்பொலி மாண்பினு
லுலைவி லாதவற் றுள்ள வொருத்தல்க
டொலைவி லாடவர் சூழ்ந்த பிடிக்குலஞ்
சிலைய வாறுத லாரெனச் சேர்ந்தன. (௧௨)

அன்ன மாமலை மேய வரும்பொனு
மின்ன வாம்பன் மணியுமிம் மாநகர்
மன்ன வாழ்தரு மாதர்க்கு மைந்தர்க்குந்
தென்ன வாம்பல செல்வங்க ளாயவே. (௧௩)

அந்த மால்வரை யாய பசுங்கழை
சந்த மாளிகை மேற்றனி யோங்கிடும்
பந்த மாருங் கொடிமரப் பண்பின
முந்த வேயமைந் தாயின மொய்த்தரோ. (கச)

மாதர் மேனி வயங்கும் விளக்கமோ
காத லன்னர் கலத்து மணிகளோ
போத வாடவர் நீற்றொளிப் பொம்மலோ
வோத நேரிரு ளோட்டுந் திறத்தவே. (கரு)

அலகின் மாதர்க ளாயுங் கொழுநர்பாற்
புலவி மேவப் பறித்தெறி பூண்களு
நிலவு நாண்மலர் மாலையு நீள்சனம்
விலகு றுநெடு வீதியிற் குப்பையே. (கசு)

பரத்தையர் வீதி.

இயன்மு யற்சிக் கிசைந்த பயன்றரு
நயனி லம்பொர நாடுபொன் னுடைவர்
செயன்ம தித்துத் தகவின் புதவுசீர்
மயன்ம டக்கொடி யார்மறு கோர்புறம். (கஎ)

செங்குந்தர் வீதி.

ஒன்று நல்கினுங் கோடி யுதவிநே
மென்று கூறுவ ரேற்றவ ருஞ்சொல
நன்று நெய்தொழி லுளும் புரிபவர்
துன்று வீதியு மோர்புறஞ் சூழுமால். (கஅ)

வேளாளர் வீதி.

உழுதொ ழிற்குரி யார்சிவ பூசனை
வழுவி லாது வயக்குநர் வாய்மையிற்
பழுதி லார்விருந் தோம்பும் பரிசினை
முழுது மேற்பவர் வீதியு மொய்த்ததால். (ககூ)

வைசியர் வீதி.

யாரு மின்னது நல்கென் றிசைப்பவுஞ்
சாரு மன்னதை யேதருஞ் செல்வமு
மோரு முண்மையு முற்ற வணிகர்வாழ்
வாரும் வீதியு மல்கிய தாயிடை. (உ0)

மறையவர் வீதி.

எய்து தீத்தொழி லேயினி தென்றுதாஞ்
செய்து நல்லவர் செம்பொரு ளாய்ந்தவர்
பொய்து வன்றுதல் போக்கிய புந்திய
ரைது வாழு மறுகுமங் கோர்புறம். (உக

MAHAMAHOPADHYAYA
... SWAMINATHAIYAR LIBRARY

### ஆதிசைவர் வீதி.

இறைமு கத்துதித் தெய்துமான் மார்த்தமு
நிறைப ரார்த்தமு மோம்பு நெறியினர்
குறைவி லாமறை யாகமக் கொள்கையா
ருறையும் வீதியு மோர்புறத் துண்டரோ. (உஉ)

### மடங்கள்.

ஆதி நாத னருளிய வாகம
மோதி மாமல மாதி யொழிந்தவர்
சோதி பாதத் துணையின் விழித்தவர்
நீதி லாமட முஞ்செறிந் தோங்குமால். (உங)

### திருக்கோயில்.

சொற்ற பஃறெருச் சூழப் பொலிதருஞ்
செற்ற வல்விட முண்டு திருந்துவா
னுற்ற தேவ ருயப்புரிந் தானமர்
பொற்ற செம்பொன் பொலிமணிக் கோயிலே. (உச)

### பிரமதீர்த்தம்.

கஞ்ச மாதி மலர்ந்து கலந்துவெள்
ளஞ்ச மாதி யடர்ந்து பொலிதரு
நெஞ்ச மாதியி னேயம்வைப் போரிடை
வஞ்ச மாதிகண் மாய்க்குமோர் தீர்த்தமே. (உரு

### திருக்கோபுரம்.

கொடியி னம்மைக்கொண் டான்பணி கோயிலென்
றொடிவில் கோபுரத் துச்சி யிவர்கவி
கடிகொள் கற்பகந் தாவுநவ காவல
னெடிய தந்தைகண் ணென்று நினைத்தல்போல். (உசா)

### திருமதில்.

மும்ம திற்கொரு மொய்கணை தொட்டவர்
தம்ம திற்குல மென்றுயர் தன்மைய
விம்ம திற்குறை யிட்டவர் யாரெனச்
செம்ம திற்றலை மஞ்சு திகழுமே. (உஎ)

### விமானங்கள்.

குலவு மேருக் கொடுமுடி யிற்பல
நிலவு சூடி நிலவரு ளெய்துவா
னலவு வாநிழல் செய்து நயந்தென
வுலவு சீர்ப்பல் விமானங்க ளோங்குமே. (உஅ)

### முரசம்.

நம்மை யொண்கொடி நாளு முயர்த்தினோன்
செம்மை யெய்தப் பணிந்தநித் தேமெனு
வெம்மை நீங்கவிண் ணோர்வந்து கூடுற
மும்மைப் போது முழங்கு முரசமே. (௨௧)

### ஸ்தலவிருக்ஷம்.

குன்று வார்சிலை கோட்டுபு மும்மதில்
வென்று வானம் புரந்த விமலனார்
நன்று மேவலி னன்மலர் சிந்தியாங்
கென்று நீழல் செயுமோ ரிருப்பையே. (௩௦)

இனிய நீழலெங் குஞ்செய் தருக்குல
னனிய வாந்தளி ராதிக ளோநல்குங்
கனிய மைந்தவிக் காம ரிருப்பைதான்
மினிய நாளும் விளக்கமு நல்குமே. (௩௧)

இன்ன வாலயத் தெம்பெரு மாட்டியோ
டன்ன மேன முயன்று மறிதரா
னின்ன றீர்த்துயிர் யாவுங் கதிபெற
நன்னர் மேவி யமர்தரு நாளுமே. (௩௨)

### திருநகரப்படலம் முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் - கூக.

---

# நைமிசப்படலம்.

சந்தமு மகிலு முந்தித் தரளமு மணியுஞ் சிந்தி
யந்தமின் மலர்கள் வாரி யலைத்திரு புறத்துந் தூற்றிப்
பந்தமெண் ணினர்க்கும் போக்கிப் பார்கிழித் தொழுகுங் கங்கைக்
கந்தவண் கோட்டு மேவு நைமிசக் காடொன் றம்மா. (௧)

### அதன்விசேடம்.

போகிவா ழிடமா யைந்து தருக்களே பொருந்தி வானத்
தாகிய சோலை கொல்லோ வவாமுத லாய குற்றம்
போகிய யோகர் வாழப் பலதருப் பொருந்தி மண்ணி
லாகிய குளிர்பூஞ் சோலை நைமிச மதற்கொப் பாகும். (௨)

தண்ணிய குணமே வாய்ந்து சமந்தம மாதி யுற்ற
புண்ணிய முனிவ ரானோர்க் கிருக்கையும் பொலிய வீந்து

நண்ணிய கனிகா யாதி நல்கவும் பெற்ற வீதை
யெண்ணிய விருகந் தங்கு மேனைய வனமோ நேரும். (௩)

வடமொழிப் புலவ ராறு மாண்புசா றமிழென் றோதுந்
திடமொழிப் புலவ ராறுஞ் செறிந்தமற் றோர்க ளாறு
மிடனுறப் புகழப் பட்ட திவ்வன மொன்றே யல்லாற்
கடலுல கத்தில் வேறு முண்டுகொல் கற்று ளீரே. (௪)

வா ன ர ங் க ள்.

மாதவர் பழக்கத் தாலே வானரக் குழாமு மோர்பாற்
காதலின் வேழ நின்ற கறையடிச் சுவட்டு நாப்பண்
மேதகு கவிர்கொய் திட்டுச் சமிதையும் வேண்டு மாறிட்
டாதர மதுத்தூய் வேள்வி யாற்றிடு மாடலாக. (௫)

சிங்கம், புலி, யானை.

ஆண்டசோ தியினு மன்னு மடியவர் சிறந்தா ரென்ப
தீண்டுநாந் தெரிந்தோ மன்னு ளிகலிய சீயம் வேங்கை
நீண்டமால் யானை யின்ன நிகரிலா முனிவர் பாங்கர்
வேண்டுபல் பணியுந் தாமே விழைதர வியற்ற லாலே. (௬)

வேதவொலிமுதலியன.

செழுமறை முழக்கு மோதை செந்தழல் விளக்கு மோதை
வழுவக லவிகொள் பாக்கு வானனை விளிக்கு மோதை
முழுதுல கிறைஞ்சு மன்னர் முழங்கிவந் திறுக்கு மோதை
யெழுகட லடைக்கு மோதை யென்னின்வே றியம்ப லென்னே. (௭)

ம யி ல் க ள்.

செறிபசுந் தழைகார் காட்டத் தேத்துளி தாரை காட்ட
வெறிகமழ் பலபூ வண்ண மிந்திர வில்லுக் காட்ட
மறிதரு வளியு குக்கும் வாலரும் பாலி காட்டப்
பொறிமயிற் குலங்க ளென்றும் பொலிந்துவந் தகவு மாலோ. (௮)

கு யி ல் க ள்.

முனிவரர் வளர்க்கும் வேள்வி முதிர்தழல் கொழுந்து காட்டப்
பனிதரு கான முற்றும் பரந்தவெப் புறுத லானு
மினியமென் றளிரின் றென்னச் சேயொளி யெழுத லானும்
புனிதமிக் கமைத லானும் பொலிவகூங் குயிலு மென்றும். (௯)

கிழங்குகள், கனிகள்.

சீலமுஞ் சிறப்பும் வாய்ந்த செழுந்தவ முனிவர்க் கெல்லா
மூலமுங் கனியு நாளு முகந்துணக் கொடுத்த லாலே
கோலமுங் குணமும் வாய்ந்த குளிர்விசும் பமுத மேனு
மாலமும் வேம்பு மாக வருவருப் புறுவ ரென்றும். (௰)

### முனிவர்.

இத்தகு வனத்து வாழ்வா ரெண்ணில்பல் லூழி கண்டா
ருத்தம வேத சார மெனவொளிர் தருவி பூதி
வித்தக வுருத்தி ராக்க மணிவிளங் கைந்தெ ழுத்தே
யத்தமென் றுவந்து கொள்வா ரளப்பருந் தவத்தின் மிக்கார். (கக)

பொறிபுல னவித்த நீரார் புகுமெனி னின்பந் துன்பஞ்
செறியுடற் கமைந்த வென்றே சிந்தையிற் பொருளாக் கொள்ளார்
குறிகுணங் கடந்த தாமோர் குறியினைக் குறித்த லன்றி
யறிவது பிறிதொன் றில்லா ரருந்தவ முருக்கொண் டன்னார். (கஉ)

ஆக்கமு மழிவுந் தங்கள் வாக்கினா லமைக்க வல்லார்
போக்கரும் புகர்சா லோடும் பொன்னுமொப் பாகக் காண்பார்
நீக்கரு முயிர்க்கூ றஞ்சு நடையினர் நெடுமா லாதித்
தேக்குவிண் ணவர்வாழ் வெல்லாங் கான்றசோ றெனத்தெ ளிந்தார். (கங)

பரசிவ புராணங் கேட்பார் பரசிவ னடியார் மேவிற்
பரசிவன் றானே யென்று பாங்குறப் பத்தி செய்வார்
பரசிவ பூசை யாற்றிப் பரசிவ தியானம் பூண்டு
பரசிவன் பணியே யென்னும் பத்தினு மமைந்து நின்றார். (கச)

கொடியகா லெழுந்து பேர்த்துக் குன்றங்க ளனைத்து மண்முற்
றொடியவெங் கனுமொன் றன்மே லொன்றுற வீசு மேனு
நெடியவேழ் கடலும் பொங்கி நிமிர்ந்துபார் புதைக்கு மேனும்
படியவாஞ் சலிப்பொன் றில்லார் பற்றோடு வெறுப்பு நீத்தார். (கரு)

### சூதமுனிவர் வருதல்.

தரைபுகழ் பெருமை சான்ற சவுநக முனிவ னாதி
வரைவில்பன் முனிவர் கூடி மகமொன்று செய்யும் போது
விரைகமழ் துளவ னேயாம் வியாதமா முனிமா னாக்க
னுரைகமழ் புராண மோரீ ரொன்பது முணர்ந்த மேலோன். (கசு)

சுத்தமெய்ஞ் ஞான சீலச் சூதமா முனிவன் மேவ
வத்தனென் றெழுந்து நேர்சென் றடிபணிந் திருக்கை நல்கி
யொத்தநல் லருக்கி யாதி யுதவுபூ சை யாற்றி
வித்தக முனிவ ரெல்லாம் விழைந்தெதி ரிருந்து சொல்வார். (கஎ)

### சூதரைக்கேட்டல்.

முற்றுணர் பெரியோ யாங்கண் மொழியும்விண் ணப்ப மொன்று
சற்றுநீ கேட்டல் வேண்டுஞ் சங்கரப் பெருமான் மேவ
லுற்றுவாழ் தலங்க ணீர்சூ ழுலகத்தி லளவி லாத
பற்றுமற் றவற்றின் மேன்மை பழுதறத் தேர்ந்தா யன்றே. (கஅ)

தலமுதன் மூன்று மேன்மை தங்கிய தாய வொன்று
நலமுறக் கூறல் வேண்டு நாங்களுய் பொருட்டே யென்றக்
குலமறை முனிவர் கூறக் குணப்பெருஞ் சூத மேலோன்
மலமுத லொழித்தீர் நல்ல காரிய மதித்தீ ரென்று. (௧௯)

பாசமி லுமக்கு வேண்டும் படியதன் றெனினுந் தீராப்
பாசவல் வினையிற் பட்ட பசுக்களீ டேற மாறும்
பாசமற் றியானு மும்மைப் போற்பய னடையு மாறும்
பாசமில் பரமன் காதை விரும்பினீர் பகர்வே னென்று. (௨௦)

### சூதமுனிவர் விடையளித்தல்.

மின்னுடைச் சடில மோலி விநாயகப் பெருமான் றாளும்
பொன்னுடைக் கடுங்கூர் வாளிப் புண்ணியப் பெருமான் றாளுந்
தன்னுடைக் குரவன் றாளுந் தன்னுளத் திருத்தி யேத்தி
மன்னுடைச் சூத மேலோன் மதித்துரை யாட லுற்றான். (௨௧)

புகழ்பிர மாண்ட மென்னும் புராணத்தி லுபரி பாகந்
திகழ்தர நவின்ம தூக வனச்சிறப் பமையுந் தீமை
யகழ்தரு மதனை யார்க்கு மிதுவரை யறைந்த தில்லை
யிகழ்தலி னீவிர் கேட்கும் விருப்பினா லிசைப்பே னின்று. (௨௨)

வண்மைசான் றுயர்ம தூக வனமெனும் பெருந்த லத்தி
னுண்மைசால் பெருமான் பஞ்ச ரூபமு மொளிரத் தோன்றித்
தண்மைசா லன்பிற் கேட்டோர் தமையும்வல் வினைதீர்த் தாளு
முண்மைசால் பிரம தீர்த்த மொன்றுமற் றதுவு மற்றே. (௨௩)

அளவறு தலங்க ளுள்ளு மதிகமவ் விருப்பைக் கான
மளவறு தீர்த்தத் துள்ளு மதிகமப் பிரம தீர்த்த
மளவறு மூர்த்தி யுள்ளு மதிகமம் மூர்த்தி முத்தி
யளவறு தவத்தீர் தூரத் தெண்ணினு மளிப்ப தாமால். (௨௪)

சென்றுகண் டாலுந் தூரத் திருந்துசிந் தனைசெய் தாலு
மொன்றுவண் புத்தி முத்தி யுதவுவ ததுவே கண்டீர்
கன்றுமைம் பொறியும் வாட்டிக் காய்தரு மலமோ ரைந்துங்
கொன்றுநின் றிடுவீர் கேண்மி னென்றிது கூற லுற்றான். (௨௫)

நைமிசப்படலம் முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் - ௧௧௬.

# பாண்டவர் உரோமசனையடைந்தபடலம்.

பொன்பூத்த குருநாட்டுப் புகழ்மிகுமத் தினபுரத்திற்
றென்பூத்த மதிகுலத்தார் திருதராட் டிரன்மைந்தர்
மின்பூத்த கழற்சுயோ தனன்முதனூற் றுவர்விளங்குங்
கொன்பூத்த பாண்டுமகார் தருமன்முதற் கூறைவர். (க)

உரைத்தவிரு வகையாரு மொற்றுமைகொண் டுறைவாழ்நாள்
விரைத்தநறுந் தார்ப்பாண்டு விண்ணுலக விருந்தாகத்
திரைத்தகடற் புவிபுரப்பான் செய்யகுணத் தருமனுக்குப்
புரைத்தவிள வரசுரிமை பொருத்தினனோக் குதவில்லான். (உ)

காந்தாரி முதன்மைந்த னதுகண்டு கருத்தமைய
நீந்தாத வழுக்காறு நிரம்புதலாற் றவம்புரியப்
போந்தோனா னொழிவலெனப் பொங்கியெழு வதுதெரிந்து
தேந்தாம நறும்புயத்துத் திருதராட் டிரனென்பான். (ங)

ஓங்குபெரும் புகழ்வாய்ந்த வுதிட்டிரன்மு னைவரையுந்
தீங்குதவிர் பிதிர்க்கடனீர் செய்துவா ருங்களெனத்
தாங்குபல பொருளுதவித் தரளங்க ளெடுத்தெறியும
வாங்குதிரைப் புனற்கங்கை வாரணவா சியிற்புகுத்த. (ச)

பெற்றவளோ டைவருமப் பிறங்குகா சியையடைந்தன
பற்றசுயோ தனன்புரிந்த வரக்குமா ளிகையொருவி
யுற்றவிடும் பாவனஞ்சார்ந் துற்றிடும்பா சுரற்சவட்டிப்
பற்றமைய விடும்பிமுலைப் பருப்பதமார் புறத்தழுவி. (ரு)

சந்தமறை யோருவப்பச் சார்ந்தபகா சுரற்சாய்த்து
வந்தகதைக் கரத்தனொடு மற்றையரா வருங்கூடி
நந்தமர்செய்ப் பாஞ்சால நகரடைந்து நீட்டரிய
சுந்தரஞ்சால் யாஞ்சாலன் றோகைதனை மணம்புணர்ந்து. (சா)

மேவியிவ ருறைநாளில் வெளிப்பட்டா ரென்றுணர்ந்து
பாவிசுயோ தனற்பெற்றான் பாதிநா டழைத்துதவத்
தேவியொடும் வளஞ்சாலிந் திரப்பிரத்த நகரடைந்தே
யோவியமல் குறமயன்செ யொப்பின்மா ளிகையமர்ந்தார். (எ)

இத்தகைய நாளியற்று மிராசசூ யங்காண
வத்தலைவந் தடைந்தாரோ டடைந்தவர வக்கொடியோ
னுத்தமய னியற்றியவவ் வொள்ளியமா ளிகைபுகுந்து
சித்தமழுக் காறவமா னமுஞ்செறியத் திரும்பினான். (அ)

MAHAMAHOPADHYAYA

தன்னகரம் புகுந்தொருமா ளிகையழகு பெறச்சமைத்து
நன்னரமை நாளிதனி னுங்குடிமே வுறநீவி
ரென்னரும்வம் மின்களென வெழுதிமுடங் கலைவிடுத்தா
னன்னதுணர்ந் தப்பொழுதே யைவருமாங் கடைந்தனரே. (௯)

அடைந்தவர்க ளன்னாரோ டாகூழில் லாமையினான்
றிடைந்தகொடுஞ் சூதாடி மேவரவு ளனைதோற்றே
யுடைந்தமனத் தினரினிமே லுறுகதியென் னெனத்தேர்ந்து
தடைந்தபெருங் கான்புகுந்தார் குருவொடுதா ரமுந்தொடர. (௧௦)

கானமடைந் தவர்வருந்திக் கலங்கியமர் தருநாளி
லூனமின்முற் றவப்பயனா லுரோமசமா முனியிருக்குந்
தானமது கண்டோடிச் சார்ந்தனையான் பதம்பணிந்தங்
கானசெயன் முழுதுமுரைத் தாகுலமுற் றழுதனரால். (௧௧)

அழுதாரை முகநோக்கி யஞ்சலீ ரெனத்தேற்றி
முழுதார்வங் குடிகொள்ள முனிவனுள நனியிரங்கி
யெழுதாத பெரும்புகழீ ரெற்றுக்கா குலமொழிமின்
பழுதாகா தெம்பெருமான் பதந்தொழினென் றருள்செய்வான். (௧௨)

வானமுழு தளிப்பானு மரைமலர்மே லிருப்பானு
மானபெரும் பாற்கடன்மேற் கிடப்பானு மகலுலகத்
தீனமின்மற் றுள்ளோரு மெம்பிரான் பூசனையாற்
றானமொடு நினைத்தவெலாந் தாழ்வறப்பெற் றுய்ந்தனர்காண. (௧௩)

நீயிர்களு மவ்வாறே நின்மலனா ரடிப்பூசை
யாயினது புரிவீரே லாகுலமுற் றொழிந்துவள
மேயினநா டும்பெறுவீர் மேற்கதியும் பெறுவீரென்
றேயினன்மற் றவருளுவந் தறமைந்த னிதுவினவும். (௧௪)

எத்தவஞ்செய் தனநினையா மெய்ப்புழிவைப் பெனக்கண்டோ
மத்தபர னடிப்பூசை யாற்றிடுமென் றருள்புரிந்தாய்
சத்தியொரு பாலவனைத் தலத்தின்விரைந் தருள்சுரக்குஞ்
சித்திநினைப் பினுமுதவத் தக்கதெது செப்புகென. (௧௫)

முனிவர்பிரா னறமைந்தன் முகநோக்கி யிஃதுரைப்பான்
புனிதமிகு சோணாட்டுப் புகழ்மண்ணித் தடங்கரைவா
யினியபுகழ் மதூகவன மென்றொருமா தலமுண்டு
பனிவிசும்பு முதலுலகம் பலவுமேத் திடப்பொலியும். (௧௬)

வெள்ளிவரை மந்தரம்பொன் மேருபருப் பதங்காசி
யொள்ளியசீ காளத்தி யொண்காஞ்சி யாலவனந்
தெள்ளியவண் கழுக்குன்றந் தில்லையா ரூர்மதுரை
வள்ளியமா சேதுமுதன் மண்ணுலகிற் பதியநந்தம். (௧௭)

இத்தகைய தலங்களினு மேற்றமா யெந்நாளு
முத்தமநா யகனருள்சா லுமையோடு மகாரோடு
மெத்துபரி சனங்களொடும் வீற்றிருக்கத் தக்கதாய்ச்
சுத்தமிக விருப்பதுதான் சொல்லியவத் தலமொன்றே. (கஅ)

அன்னதலத் துதித்ததரு வாதிகொடி யொடுபுல்லுந்
துன்னுமிரு கழும்பறவைக் குலங்களுஞ்சூழ் கிருமிகளு
மென்னவும்வன் கயிலாயத் தெய்தியினி தமருமெனின்
மன்னவமற் றதன்பெருமை வகுத்திடுதற் கெளிதாமோ. (ககூ)

ஆயதலத் தெஞ்ஞான்று மந்தணர்முன் னுல்வர்களும்
பாயபுக ழமரர்களும் பங்கயனு நெடுமாலு
மேயபெருங் கின்னரர்கிம் புருடர்வித்தி யாதரருந்
தூயதவ முனிவர்களுஞ் சூழ்ந்துவிடா தமர்குவரால். (உ0)

திருந்துபெரும் புகழ்ப்பிரம தீர்த்தமென வொன்றுவிட
மருந்துசெய்நா யகர்க்கெதிரே மன்னியுள தெஞ்ஞான்றும்
பொருந்துமதின் மூழ்குநர்கள் போகமெலா மனுபவித்து
வருந்துதலி லிறைவனடி மலர்கலப்ப துண்மையே. (உக)

மேடமதிப் பூரணையின் மிளிர்பிரம தடத்துநீ
ராடவருந் தவம்புரிந்தா ரடையபயன்யா ரெடுத்துறைவார்
மாடமலி புகழ்க்காசி வளநகர்க்கங் கையுமிதுபோற்
பாடமையும் பயன்றரா தென்னினினிப் பகர்வதெவன். (உஉ)

அன்னமலி திரைக்கங்கை யடைந்துகுடைந் திறப்பரெனிற்
பன்னகம்பூ ணிறையவனூர் தம்முருவம் பாலிக்கு
மின்னதட மறவியினோர் தினம்படிந்தா ரெனினுமவர்
பின்னமற வடிக்கலக்கும் பேரின்பக் கதியளிக்கும். (உ௩)

எத்தலத்தி லேந்துவகை யுருத்தோற்றி யிறையவனூர்
முத்தலமும் புகழ்ந்தேத்த முனிவின்றி யமர்கின்ற
வத்தலத்தி லவர்க்குநிழ லளிக்குமதா கப்பெருமை
யைத்தலத்து மண்சுமக்கும் பாப்பரசுஞ் சொலற்கரிதால். (உ௪)

பிரானெதிரே நடமாடும் பிள்ளையா ரிருப்பரவர்
பராவுகழல் பணிந்தார்க்குப் பயவாத சித்தியிலை
யராமுடிமண் பொறுப்பாய்நின் னனுசரொடு மாங்கடைந்து
விராவுறுபூ சனையாற்றி விழைவெலாம் பெறுகென்றான். (உரு)

பாண்டவர் உரோமசனையடைந்தபடலம் முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் - கசுக.

# நடனவிநாயகப்படலம்.

முரசக கொடியோ னதுகேட்டு முனிவர் கோமான் பதமபணிந்து
பரசப் படுநா யகனெதிரே பாரா தரிகக நடநவிலும்
பிரசக் கடுகைக் களிறறுமுகப் பெருமா னுளனென் றுயனேயான
விரசக களிதது நடமாடற கேது விளமபு கெனவிளமபும. (க)

வானோர் தருதண மதிகுலத்து மன்னு கேட்டி முன்னொருநாட்
டேனோர் கமல மலர்மேலான றினமொன றிறுதி யெயதுதலுங
கூனோர் வளைகள் பயிலகடலுட் கொணட புனன்மேற பொஙகியெழூஉக
கானோர் புடவி முழுவதுநத னகததே மறையக் கதிததே. (உ)

இந்த வாறு பிரளயமே விட்ட துணாந்து சிவபெருமான
மைந்த ரான களிறறுமுக வரதன மணிவேல வலனுயாததோன
கந்த மேவு குழலுமையாள் கணஙகண முதலோர் புடைசூழச
சந்த மாரும புவிமகளோா நாவா யாகச் சமைததிவாநது. (௩)

அஙக னுலகுக் குபகார மாநப் புவியா கியதோணி
யெங்கும் வளைந்த பிரளயமே லியஙக வியககி வருபோது
பொங்குந் தரஙக மலியுமிரு பொனனி நதிக்கு நடுப்பொலிந்து
தஙகு மண்ணிக் கரையருகு சார வநது நிறுததினான். (௪)

திருப்பாற் கடலி லொருதோணி சேரக் கிடததி யததோணி
விருப்பாற் புணரு மொருதோணி தன்னை விருப்பி னிறுததுதலு
மருப்பாற் பொலியு மதூகநெடுங கிளையாங கலைநீ ரிடையலையச்
சுருப்பாற் பொலிபூங் குழலுமைக்கித தோனறுலிதுவென் னெனப் புகலவான்

மாதே நமககு மிகவிருப்பம வளாககுங தகைய திததானம
போதேய் தருமிக் கிளைநமக்கு நிழலசெய மதூகப் பொலிகிளைகா
ணீதே பலவைப் புளுஞ்சிறநத தெனறு னதுகேட் டுமையுவநதா
டாதேய் கடுகைக் களிற்றுமுகச சாமி யதுகண டினிதெழுந்து. (௬)

மேவ நீடு பெருமகிழசசி மிககா னநதங் தலைசிறப்ப
வேவர் தேர்வ ரித்தலதலி னிணையில் பெருமை யெனறுன்னித
தேவ தேவ மாதேவ தேசோ மயவென றுறததுதிததுப்
பாவ ராக தாளமொடு பயிலு நடனம புரிகினறான. (௭)

இந்தத தலத்துக் கொப்பாவ தேற்ற மாவ தெஙகுமிலை
யிந்தத் தலத்தைக கணடபொழு தெனககா னந்தந தலைசிறந்த
திந்தத் தலத்தைக காணுதா ரெய்துங கதிகா ணுதாாயா
னிந்தத் தலததை யகலேனென் றெழுநது நடனம புரிகின்றான். (௮)

நேய விதியாய்ப் படைப்பவனீ நெடுமா லாகிப் புரப்பவனீ
பாய வரனாய்த் துடைப்பவனீ பந்த முழுது மளிப்பவனீ
யாய வதுதீர்த் தருள்பவனீ யகிலம் பரவப் படுபவனீ
ஆய சோதி நீயென்று சொல்லி நடனம் புரிகின்றான். (௯)

முன்னே நடந்தும் பின்னடந்து முருகு விரிவாய் நகையரும்பப்
பொன்னேய் சிலம்பு கலகலெனப் பொலியு மொருதா ளெடுத்தூன்றித்
தன்னே ரொருதா ளிடம்வலமாஞ் சாரி சுழன்று கைவீசித்
துன்னே ரொழுக வெழுந்துதுள்ளித் துள்ளி நடனம் புரிகின்றான். (௧௰)

மதிக்கு மகுடம் வில்வீச மகரக் குழைக ளசைந்தாடத்
துதிக்கு மதாணி முதலாகச் சுடர்செய் மணிப்பூ ணிருண்மேயக்
கதிக்கு முதர பந்தமொடு கவின்செய் தொந்தி யசைந்தாடப்
பதிக்குங் கருணை யூற்றரும்பப் பாங்கார் நடனம் புரிகின்றான். (௧௧)

அரிய தலமித் தலங்கண்டே னுவா வென்று சிறுபோழ்து
தெரிய வொருகை விரனீட்டிச் சிறப்பத் தெரித்துஞ் சிறுபோழ்து
புரிய மலர்க்கண் கொடுதெரித்தும் பொற்பார் திருவாய் மலர்ந்துண்மை
விரியச் சிறுபோ தெடுத்துரைத்தும் விளக்கி நடனம் புரிகின்றான். (௧௨)

காம தகன நினைத்தொழுதேன் கால கால நினைத்தொழுதேன்
சோம சூட நினைத்தொழுதேன் றுணைவி விடாது வீற்றிருக்கும்
வாம பாக நினைத்தொழுதேன் மதூக வனத்தாய் நினைத்தொழுதே
னேம வுருவ நினைத்தொழுதே னென்று நடனம் புரிகின்றான். (௧௩)

ஊழி கடக்கு மதூகவனத் துண்மை நோக்கி யிவ்வாறு
வாழி கடக்குஞ் சரமுகத்து மைந்த னடனம் புரிதரலு
மாழி கடக்குங் கொடுவிடமேற் றடக்குங் கண்டத் தவன்மகிழ்ந்தான்
வீழி கடக்கும் வாயுமையாண மகிழ்ந்தாள் பிறரும் வியந்தனரே. (௧௪)

தோணி யியக்கி வருபெருமான் றேலா நடனம் புரிந்தபிறை
வேணி யொருத்தன் முகநோக்கி வேண்டும் வரமென் னுனக்கென்னக்
காணி நினக்கீ தித்தலத்தைக் கடவா தமர்க மிக்கன்பு
பூணி யாய யானுமுனக் கெதிரே யமர்ந்து பொலிகின்றேன். (௧௫)

இங்கு மருவி யெனைப்போற்றி யெம்மா னேயுன் றிருவடிக்குங்
கொங்கு மலர்தூய்ப் பணிவோர்கள் குறிகொ ளிம்மைப் பயனுகர்ந்தே
யங்கு மருவிப் பெருமபோக மலகில் பலநா ளுகர்ந்ததர்பின்
றங்கு நினதாட் கலப்படைந்து தாவா வின்பத் திடைமூழ்க. (௧௬)

இன்ன வரங்கள் வேண்டுமென வெம்மா னவ்வா றருள்புரிந்து
நன்னர் மகிழ்ச்சி தலைசிறப்ப நங்கை யுமையா ளொடுநினைவார்க்
கின்ன றுமிக்குங் கந்தனொடு மெதிரின் மற்றைக் கணங்களொடுஞ்
சொன்ன தலத்தே யினிதமர்ந்தான் றொழுதுய்ந் திடவா னுலகெல்லாம். (௧௭)

நன்று வேழ முகப்பெருமா னுத னெதிரே யுறைகின்ற
னன்று முதலா யாவருங்கூத் தாடும் பிள்ளை யெனப்பகர்வர்
சென்று பணியு மடியவர்க்குச் சித்தி யனைத்து மருளியிடர்
கொன்று புரப்பன் மதூகவனக் கூத்தாட் டுவந்த வப்பெரியோன். (௧அ)

முட்டி யிருகை களும்பிடித்து மூன்று தரந்தம் முடித்தலையிற்
குட்டி யிருகை களுமாறிக் குழைக்கா திரண்டும் பிடித்துவிருப்
பொட்டி வினைய விருந்தெழுவார்க் கொருகூத் தாடும் வேழமுக
னெட்டி வினைகெட் டோடவிழை யெல்லா முதவன் கருள்செய்வான். (௧௯)

கதலி வருக்கை மாநாவற் கனிமோ தகமின் சுவைநோலை
யிதமென் றுரைக்கும் கடலைபய றினிய கரும்பு முதலாகச்
சிதர்த லறுமா நிவேதித்துத் தெங்கங் காயுந் தகர்ப்பாரேன்
மதகுஞ் சரமா முகனவர்க்கு வழங்கும் பயனை யளப்பவரார். (௨0)

நீண்டு மதூகக் கிளைதோற்றி நிரி லலைவோர்ந் துமைவினவ
வாண்டு பெருமா னருளவுவந் தாடுந் திறத்தால் விநாயகனுக்
கீண்டு மனைய பெயராயிற் றென்று நீதி கோடாத
பாண்டு மகனே யுணரென்றான் பண்பார் தவத்து ரோமசனே. (௨௧)

நடனவிநாயகப்படலம் முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் - ௧௬௨

---

# மதூகவனப்படலம்.

மாண்ட மாமுனி யுரோமசன் றாளிணை வணங்கி
நீண்ட காதலி னறமக னெடும்புன லலைதல்
பூண்ட வான்கிளை மதூகமென் றுயதன் புராண
மீண்ட நீவிரித் துரையென முனிவர னிசைப்பான். (௧)

பந்த மாருயிர் முழுமையும் பாற்றிடு பாக்குச்
சந்த நான்மறைத் தலைநட நவிலுநந் தலைவன்
முந்த வேயவ னருட்குறி வடிவமாய் முளைத்தா
னந்த நாணிழல் செயுந்தரு வொன்றனை யவாவி. (௨)

மன்னு வெள்ளிமால் வரையமர் தருசுர மதூக
முன்னு முன்னமிங் கடைகென முன்னலு முதல்வ
னுன்னு மத்திற முணர்ந்தவ ணொரீஇயிவ ணுற்றுப்
பன்னு நாயகன் பதந்தொழூஉப் பணியெவ னென்ன. (௩)

இசைம தூகமே நமக்குத்தென் கிழக்கெனு மெல்லை
யசைத ராதுநீ நின்றுபல் லூழியு மமையப்
பசைசெய் நன்னிழல் செய்கெனப் பணித்தனன் பணிந்து
திசைய ளாங்கிளை மதூகநேர் நின்றிது செப்பும். (௪)

ஐய நின்பணி தலைமிசைச் சுமந்தன னடியேன்
வெய்ய தீத்திசை விரும்பியா னமர்விழை வாலச்
செய்ய தீச்சுட ரெனதுநெய் விழைந்துனல் செயவும்
வெய்ய மற்றதி னீமகிழ் வெய்தவும் வேண்டும். (௫)

இந்த நாட்டிலென் சாதிமேன் மேற்பெரு கிடவுஞ்
சந்த மாருமென் னெய்கொடு விளக்கிடுந் தகையோர்
பந்த மோவுமா னெய்யினும் பயன்மிகப் பெறவு
மந்த மேவினென் சாதிநின் னுலகடை தரவும். (௬)

இறுதி மேயவென் சாதியா கியதரு வெல்லா
முறுதி மேவிய நின்பணிக் கேயுரித் துறவு
மறுதி யில்லவ வளிக்கென வேண்டலு மனைத்தும்
பெறுதி யென்றனன் மகிழ்ந்தது பெரும்பெயர் மதூகம். (௭)

விழைபெ ரும்பயன் றனெனக் குலமெலா மேவத்
தழைவி ருப்பொடு தம்பிரான் பாற்பெறு மதூகங்
கழைவி லான்பகை மொழிப்படி யழலவன் கருபங்
குழைய ரும்புகாய் கனியொடு நின்றது குலவி. (௮)

அற்றை நான்முதன் மதூகநீர் நாடெலா மாகிப்
பற்றை யார்தரக் காய்த்துநன் னெய்பரிந் துதவிக்
கற்றை வார்சடைத் தம்பிரான் றளியெலாங் கதிர்ப்ப
வெற்றை ஞான்றினும் விளக்கியுய் தருதிறத் தியைந்த. (௯)

தால மேழுடை யவன்றிசை மரீஇயவத் தருநீர்
ஞால மேத்திட நன்னிழ லுயகற் குதவிக்
கோல மாரவன் றிருவுரு வுள்ளத்துட் குறித்துச்
சால வின்பமுற் றரும்பிட நின்றிடுந் தழைந்து. (௧௦)

அனைய தாருவை வலஞ்செய்து தொழும்பணி யமைந்தார்
புனைய வல்லரா யிம்மையிற் படுபெரும் போக
நனைய வாதரத் தொடுநுகர்ந் திறுதிசான் ஞான்று
துனைய விந்திரன் முதலியோர் பதமெலாந் துன்னி. (௧௧)

அங்கு மேவுபல் போகமுந் தனித்தனி யமையத்
தங்கு மார்வத்தி னுகர்ந்துபின் சதுமுகத் தலைவன்
பொங்கு பாற்கடற் பள்ளியோன் புந்திக்கு மெட்டா
தெங்கு மாயவன் சிவபுரத் தெய்தியின் புறுவார். (௧௨)

அம்ம தூகத்தைக் கண்டவர் பெரிதற மடைவா
ரம்ம தூகத்தைத் தொழுதவர் பெரும்பொரு ளடைவா
ரம்ம தூகத்தைச் சூழ்ந்தவ ரின்பமிக் கடைவா
ரம்ம தூகத்தைத் துயாணிதனோ முதறியு மடைவார். (௪-அ

வந்தி யானவ ளத்தரு தாருவை வலஞ்செய்
தந்து வானிறத் தணைமேல யென்றுளத் தமையச்
சிந்து யாவனைத் துருகலோ மண்டலஞ் செய்யிற்
புந்தி யா தரு நன்மகப் பெறுகுவள் புரிந்தே. (௧௪)

விரிந்த வத்தரு தாருவி னடியுற வேதி
பரிந்த வன்பிறைற் புரிபவர் பெறுவரெப் பயனும்
புரிந்த தீவினை யாளரு மதனிழல் புக்கா
லெரிந்த கூற்றுவன் றண்டமு மிகப்பரி தூண்மை. (௧௫)

காணி லின்பமிக் களிகருமத் தருநிழல் கலந்து
தோணி யாயபூ தேவியு முறைவணமுற் றெழுது
வாணி கேள்வனாய கமைத்தவோர் தீர்த்தமும் வயங்கும்
பாணி பாய்குரு நாடனே யுணரெனப் பகர்ந்தான். (௧௬)

மதூகவனப்படலம் முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் - ௧௭அ.

# பிரமதீர்த்தப்படலம்.

நன்றுளத் தடைத்த வேந்த னருபுகழ் முனியைத் தாழ்ந்து
வென்றுள மதூகக் காட்டின் மேவிய பிரம தீர்த்த
மொன்றுள தென்று யந்தத் தீர்த்தத்தின் வரலாற் றுண்மை
யின்றுளந் தெளியச் சொற்றி யென்னவம் முனிவன் கூறும். (௧)

அரும்புசான் மதூக நீழ லமர்ந்தருண் முக்கண் மூர்த்தி
விரும்புதா மரையோன் மாயோன் மேனியி னிருபா கத்து
நிரம்பவந் துதிக்கு மாறு நினைந்தன னினைந்த வாறே
பரம்பவவ் விருவா தோன்றிப் பணிந்துமுன் னின்றார் முன்னம். (௨)

பணியெவ னென்று நின்ற பங்கயத் தவனை மாலை
யணிகிளர் கடுக்கை மோலி யங்கண னருளி னோக்கிப்
பிணிதப வுயிர்க ளெல்லா மாக்குதி பிரம மாலே
தணிவறக் காத்தி யென்று னப்பணி தலைமேற் கொண்டார். (௩)

அனையருட் பிரம னென்பா னாணவ மலக்கோட் பட்டுத்
தனைநிகர் பவரா ரென்று தருக்கினான் றருக்க வாக்கும்
வினையிழந் தவல னாகி மாயனைப் பணிந்து வேண்ட
வனைதுழாய் முகின்ம தூக வனம்புகூஉப் பணிதி யென்றான். (௪)

என்றலு மலரின் மேலா னிருப்பையா ரணியம் புக்கு
நன்றவ னமர்கூத் தாடு நாயகக் களிற்றைப் போற்றி
மன்றலைந் துருவ மாகி வயங்குசங் கரப்பி ரானை
மென்றளிர் மேனி வாய்ந்த தேவியை விருப்பிற் றாழ்ந்து. (௫)

வானக முரிஞ வோங்கு மதூகத்தைச் சூழ்ந்து போற்றித்
தேனக மலரான் மீட்டுஞ் சிவலிங்கப் பெருமான் முன்போய்த்
தானக மகிழ்ந்து நேரோர் தடஞ்சமைத் தத்த டத்தே
மேனகந் தரநீ ராதித் தீர்த்தங்கள் விரவச் செய்து. (௬)

தருப்பைகை விரலிற் கோத்துச் சங்கற்பஞ் செய்து கொண்டு
விருப்பையுள் ளமைத்து மூழ்கி வெள்ளிய நீறு பூசிப்
பொருப்பைவில் லாக்கி னோன்கண் புணர்மணி வடங்கள் பூண்டே
யிருப்பைமா வனம்புக் கானைந் தெழுத்துநாத் தழும்ப வோதி. (௭)

மின்செய்த முந்நூன் மார்பன் விரும்பித்தான் சமைத்த தீர்த்தம்
பொன்செய்த குடத்து மொண்டு புரிசடைக் களிற்றை யாட்டித்
தென்செய்த மலர்க ளாதி செறிதரக் கொடுபூ சித்துக்
கொன்செய்த வனுவை வாங்கிக் குழகன்முன் சென்றா னன்றே. (௮)

ஐவகை யுருவாய் நின்ற வமலநா யகனை நாளு
மெய்வகை விளக்கி நின்ற விமலமா தேவி தன்னை
நைவகை யில்லா வன்பி னறும்புனன் மொண்டு மொண்டு
செய்வகை மனுக்கள் கூறித் திருந்துற வாட்டி னானே. (௯)

சந்தன நறிய வில்வந் தாமரை மலர்முன் னான
கந்தமென் மலரு மற்ற யாவையுங் கையிற் கொண்டே
யந்தமொன் றில்லா வன்பி னமைதரு பூசை யாற்றி
முந்தநேர் பணிந்தெ ழுந்து தோத்திர மொழிய லுற்றான். (௧௦)

கோணுடை மலக்கோட் பட்டுக் குணமழிந் தறத்த ருக்கி
யேனுடைத் தொழிலுங் கைவிட் டிளைத்துவந் தடைநா யேற்கு
மாணுடை யுருவங் காட்டி மயக்கற வருளு நாகப்
பூணுடைப் புராண போற்றி பூரண முதல்வ போற்றி. (௧௧)

சென்னியோர் பத்து வாய்ந்த தீத்தொழி லரக்கன் போந்து
மன்னிய கைலைக் குன்றைப் பெயர்த்தலு மலர்த்தா ளூன்ற
முன்னிய வனையான் றேர்ந்து முற்றருக் கொழிந்து பாடத்
துன்னிய நாளும் வாளுங் கொடுத்தரு டணிவு போற்றி. (௧௨)

அறிவிலா மையினால் யானு மாழியஞ் சேக்கை யானு
மெறிதராச் செருக்கி னால்யாம் பிரமம்யாம் பிரம மென்று
மறிதரா துடற்ற வந்த மனச்செருக் கொழியு மாறு
முறிதரா கழல்வெற் பாகி நின்றருண் முதன்மை போற்றி. (௧௩)

பாலனா ருயிர்மேல் வந்த காலனார் பதைப்ப மாய்த்துக்
காலனார் மீட்டும் வேண்டக் கண்ணருள் புரிந்தாய் போற்றி
வேலனார் தம்மைத் தந்து வெந்தொழி லவுணர்க் கஞ்சிக்
கோலனார் தம்மை யாண்ட குணப்பெருங் குன்றே போற்றி. (௧௪)

இளைத்தடைந் தபய மென்ற விந்துவைத் தரித்தாய் போற்றி
முளைத்தெழுந் திங்க ளெங்கண் மொய்வினை தொலைப்பாய் போற்றி
தளைத்தகட் டறுத்து வீடு தாழ்ந்தவர்க் கருள்வாய் போற்றி
வளைத்தநீர் மண்ணி சூழு மதூகமா வனத்தாய் போற்றி. (௧௫)

என்றிருந் துதிகள் பாடி யிருகணீ ரருவி பாய
மன்றலங் கமல மேலான் மதூகநன் னிழலிற் சென்று
நன்றமை யுதிசி நோக்கி நருகரந் தலைமேற் கூப்பித்
தன்றனி யுளத்து நாதன் சரணம்வைத் திருந்தா னன்றே. (௧௬)

மறையவன் பன்னா ளிவ்வா றிருத்தலு மகிழ்ந்த வேணிப்
பிறையவன் சமட்டி யான பேருருக் கொண்டு தோன்ற
விறையவன் காட்சி தந்தா னென்றுளத் துணர்ந்து வேத
னறையவ னடியில் வீழ்ந்தா னன்றெழுந் தாடிச் சூழ்ந்தான். (௧௭)

அயனுடை யன்பு நோக்கி யாண்டநா யகன்ம கிழ்ந்து
வியனுடைச் சமட்டி நீங்கி வியட்டியா முருவ மாய
நயனுடைக் காட்சி நல்க நான்முகன் மீட்டுந் தாழ்ந்து
பயனுடை யவன்யா னென்றான் பண்ணவன் வரங்கே ளென்றான். (௧௮)

அண்ணலே யடியேன் பூசை யாற்றநீ யுவந்த வாற்றான்
மண்ணகம் பிரம நாத னென்றுனை வழங்க வேண்டு
நண்ணுநின் றிருமுன் னாக நாயினே னமைத்த தீர்த்தம்
புண்ணிய பிரம தீர்த்த மென்றுபேர் பொலிய வேண்டும். (௧௯)

அடியனேன் கண்ட விந்த வியட்டியா முருவ மைந்தோ
டொடிவில்பல் லூழி தோறு முற்றிவண் பொலிய வேண்டும்
வடிவமிவ் வைந்துங் கண்டோர் வழுத்தினோர் பூசை செய்தோர்
நெடியபல் போகந் துய்த்து நின்பத மடைதல் வேண்டும். (௨௦)

மேடமா மதியின் மிக்கு விளங்குபூ ரணையி னாயேன்
கூடநீ காட்சி தந்த கொள்கையா லினைய நாளி
லாடவல் லவரித் தீர்த்த மரும்பெரும் போகத் தாழ்ந்து
வீடருந் துறக்கந் துய்த்து நின்பதம் விரவல் வேண்டும். (௨௧)

செருக்குபு கடையேன் விட்ட சிருட்டியும் பெறுதல் வேண்டு
முருக்குமுப் புரமுஞ் செந்தீ முழுகமுன் னகைத்தா யென்று
மருக்கிளர் மலரோன் வேண்ட வள்ளலு மகிழ்ச்சி பூத்துத்
திருக்கிள ரிவையெ லாந்தந் தோமென்று பின்னுஞ் செப்பும். (உஉ)

நம்மைநீ யாட்ட வேணடி நமக்குமுன் னமைத்த தீர்த்தஞ்
செம்மைசேர் மனத்த ராகிச் சேர்ந்தெவர் மூழ்கி னாலும
வெம்மைசேர் பழ்பா வங்கள் விட்டுயர் புனித ராவ
ரம்மைவா னவரே யாகி யருமபெரும் போகத் தாழ்வார். (உங)

துன்னுமூ வுலகத் துள்ள சுத்தநற் றீர்த்த மெல்லா
மன்னிநீ யமைத்த தீர்த்த மருவிடப் புரிந்தோ மற்றுற்
கன்னிநா வுடையா யந்தத் தீர்த்தத்திற் கலந்து மூழ்கின்
மின்னிவாழ் பஃறீர்த் தத்து மாடிய பயனே மேவும். (உச)

தென்புலத் தவர்பொ ருட்டுத் திருந்தநீ யமைத்த தீர்த்த
நன்புலக் கரையின் மேவிச் சிராத்தநன் கியற்று வாரேன்
முன்புலப் பரிய வாய வினையெலா முழுது மாய
வன்புலப் பரிய தாய்வந் தடைந்துநம் முலகில் வாழ்வார். (உரு)

என்றுநன் கருளி யெங்கோ னெழின்மலர் மிசையோன் றன்னை
தன்றனிக் கரத்தால் வாங்கி முதுகுதை வந்து பன்னாள்
வன்றவம் புரிந்து டம்பு மெலிந்தனை போலு மைந்தா
நன்றுநன் றென்றான் றாழ்ந்து நான்முக னுய்ந்தே னென்றான். (உசு)

அலர்மரு விருக்கை யானை யரதன பீடத் தேற்றிப்
பலர்புகழ்ந் தேத்த வையன் பரிந்தபி டேகஞ் செய்து
குலவுசத் தியலோ கங்கைக் கொண்டினி திருத்தி யென்றான்
விலகரு மகிழ்ச்சி யோடும் விதிகரங் குவித்தெ ழுந்து. (உஎ)

கோயிலை வலங்கொண் டேத்திக் கும்பிட்டு நேரே வந்து
தாயினு மினியான் றன்னைத் தாயொடுந் தாழ்ந்து போற்றி
நாயினே னுய்ந்தே னல்கு விடையென நன்கு பெற்றுப்
பாயின கணங்கள் சூழப் பரவுதன் னுலகம் புக்கான். (உஅ)

தன்னுடை யுலகத் தெய்தித் தண்ணிய மதூக நீழன்
மன்னுதம் பிரானை யன்னான் வாமத்து முதல்வி தன்னை
முன்னுபு சிருட்டி செய்து முகிழ்முலை வாணி யோடு
துன்னுமின் புற்று வாழ்ந்தான் சூட்டன முயர்த்த தோன்றல். (உகூ)

இந்திர னாதி யெண்ம ரிண்டைமா மலரோன் போல
வந்தொரு பிரம தீர்த்த மருவிநீ ராடி யையன்
பந்தமில் பாதம் போற்றிப் பரவுதம் மிருக்கை பெற்றா
ரந்தமில் பெருமான் கையா லபிடேகஞ் செய்யப் பெற்றே. (ஙo)

பின்னுமோர் காலத் தெய்திப் பெருவலிக் குலிசப் புத்தேளை
மன்னுமப் பிரம தீர்த்த வாவிநீ ராடப் பெற்றுத்
தன்னுடைப் பழிதீர்ந் தையன் றாட்டுணை பழிச்சி வாழ்ந்தா
னின்னுமத் தீர்த்த மேன்மை யியம்பவல் லவர்யா ரென்றான். (௩௯)

பிரமதீர்த்தப்படலம் முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் - ௨௦௯.

# இந்திரன்பழிதீர்ந்தபடலம்.

மறைநவிலும் பயனுய வெண்ணீறுங் கண்மணியும் வன்ன மைந்துங்
குறைவில்பொரு ளெனக்கொண்முனி பாதமலர் முரசுயர்த்த கொடியோன்
நிறைகருணைப் பெருவாழ்வே பிரமதீர்த் தம்படிந்து நெடுவா னுட [றாழ்ந்து
னறைபழிதீர்ந் தனனென்ற யக்கதையுங் கூறுகென வருளிற் கூறும். (௧)

தானவர்தங் குலந்தழைப்ப முன்னம்விருத் திரனெனுமோர் தகுவன் றோன்றி
வானவர்தங் குலஞ்சாய வெளிவந்தான் பகைசவட்டும் வலியான் மிக்கான்
போனவிருத் திரனினுமேம் படுவலியான் பளிங்கினடி போற்றிச் சூழ்ந்தே
யீனமின்மா தவம்பதினு யிரவருடம் விதியைநினைந் தியற்றி னானே. (௨)

விதியுமவ னெதிர்தோன்றி வேண்டியதே னுரைத்தியென விளம்ப லோடு
மதிவலிசால் விருத்திரனு மெழுந்துபணிந் தடிகேள்யா னமர்க்குங் காலை
மதியமைய வெதிர்நின்று பொருமமர ரானரரான் மாவாற் புள்ளாற்
பதியவிரும் பாலமைத்த வேதிகளாற் சாவாத படிநல் கென்றான். (௩)

என்றலுமப் படியருளிச் சத்தியலோ கம்புகுந்தா னீன்ற தாதை
குன்றநிலை கலங்கவிரு தோள்புடைத்து விருத்திரன்றன் குரவற் றாழ்ந்து
வென்றவர மெடுத்தியம்பி நால்வகைச்சே னையுஞ்சூழ விரைந்து போந்து
மன்றனெடுங் கற்பகநாட் டினைவளைத்தான் வானவரு மறலி மூண்டார். (௪)

இருபெருஞ்சே னையுமுனைந்து கைகலந்து சிலைவாங்கி யெறிந்து நாணை
வெருவருவா ளிகள்பொழிந்துந் தண்டுகொடு மோதியும்வாள் வீசி யார்த்தும்
பொருவரும்வெஞ் சமர்புரிய விருத்திரன்போர்க் களம்புகுந்து பொங்கிச் சீறி
யொருவருவா ளிகள்சொரிந்தான் வானவர்தம் படைகலங்கி யோடிற் றன்றே.

எதிர்பொருவார் வெல்லாத வரமுணர்ந்திந் திரனுமெதி ரேற்றா னில்லை
யதிர்கழல்வா னவர்பகைவன் பொன்னுலக முழுவதுந்தன் னாணை நாட்டி
வெதிர்பொருதோ ளரம்பையரைப் பிடித்தலைத்து மறுக்கமிக விளைத்து வாழ்ந்
கதிர்முடிவா னுடரொடு மிந்திரன்சத் தியவுலகங் கருதிப் புக்கான். [தான்

வெள்ளைமலர்க் கிழத்திபெருந் தனத்துணைக ளுழுதுழக்க வீங்குந் தோளானை
கள்ளையுமிழ் மலர்ப்பாதங் கலந்திறைஞ்சி யெழுந்துநின்று கைகள் கூப்பி

வள்ளைபொரு மதர்நெடுங்க ணயிராணி முலையுழக்க மகிழுந் தோளான்
றெள்ளைபடு மனத்தேனாய் வந்தேனென் றழுதெடுத்துச் சொல்ல லுற்றான்.

ஐயனே நீகொடுத்த வரவலியால் விருத்திரனென் னரசு மாற்றி
வெய்யதீ வினைபுரிய மெலிந்துவா னாடரொடு மேவி னேனா [ஞ்
லுய்யவாம் வழியிதுவென் றொன்றுணாத்தி யெனமுறையிட் டுரைத்த லோடு
செய்யவாய் மறைக்கிழவ னிரங்கியுளத் தோர்ந்ததனைச் செப்ப லுற்றான். (அ)

வானாட ரொடுமடைந்த மகபதிநீ யஞ்சற்க வலியான் மிக்கா
மேனாளில் வரம்பெற்ற தெதிரிந்தாரா லிருப்பேதி விசேடத் தாற்றன்
றானொரு முயிர்துறவா வரமன்றே யானைமிசை யுடன்று சேறி
யானாத பகைவனுநின் னெதிர்வந்து போர்புரியு மன்ன காலை. (கூ)

அனையனினை யெடுத்துவிழுங் கிடுவனெனு பாங்குலிச மதனா லன்னான்
கனையுமுரங் கிழித்துவெளி வருதிபெரு வாகையுமுன் கண்ண தாகும்
வினையமிது போதியென விடைகொடுத்தா னமரரொடு மீண்டான் வேந்தன்
றுனையவம ராவதியைப் போய்வளைந்தா னானவருஞ் சூழ்ந்து நேர்ந்தார். (கo)

மொய்த்தபெருந் தானவர்தோள் கொட்டினார் முகரோம முறுக்கினார்தோள்
வைத்தசிலை வாங்கினார் நாணெறிந்தார் வடிவாளி யாய்ந்தார் முன்ன [னார்
மெய்த்தவர்தா மெவ்வலிகொண் டிங்கடைந்தா ரென்றுநகைத் தெயிறு தின்
பைத்தவழல் விழிகாட்டி நெடுமொழிசொற் றெழுந்தனர்வான் பதைத்த தம்மா.

எறிவாரு மெய்வாரு நெடுமரம்வேர் பறிதரப்பேர்த் தெறறு வாரு
முறிவாருஞ் சினப்பாரும வைவாருஞ் சினந்துநெடு மொழிசொல் வாரும்
பறிவாரு நெறுநெறெனப் பற்கள்கறிப் பாருமிவர் பான்மை யிற்றென
றறிவாரு மெழுவாரு மசுரரா யினர்சுரரு மனைய ரானார். (கஉ)

வேலரொடு வேலர்நெடு வில்லரொடு வில்லர்கழல் விசித்துக் கட்டுங்
காலரொடு காலர்கதைக் கையரொடு கையர்தலை கவைத்த வெந்தீச்
சூலரொடு சூலர்வட்டத் தோலரொடு தோலரழல் சொரியா நிற்கும்
பாலரொடு பாலரிவ்வா றிருதிறத்தா ருஞ்சினந்து பண்ணி னார்போர். (கஙூ)

தலையோடு முடியிழந்தார் காலோடு கழலிழந்தார் தாவாத் திண்டோண்
மலையோடு தாரிழந்தார் கையோடு வாளிழந்தார் மாற்றா ரஞ்சு
கிலையோடு சினமிழந்தார் கண்ணோடு நெருப்பிழந்தார் நீங்கு றாது
கொலையோடு பயிலசுர ரதுகண்டு விருத்திரனுங் கொதித்தேற் றானே. (கச)

சினங்கொண்டு விருத்திரனு மமரர்படை யுட்புகுந்து திரிந்தோர் சாரி
வனங்கொண்டு முகில்பொழிவ தெனக்கணைபெய் திடவிரிந்தார் வான நாட
ரனங்கண்டு மொழிநடையா ளயிராணி மணவாள னதனைக் கண்டு
தினங்கண்டு குலிசமொடு வெள்ளானை மிசையிவர்ந்து செலுத்தினானே. (கரு)

யானைமிசை வருவானை விருத்திரன்பார்த் தனன்விளைந்தீங் கெய்து கென்று
தேனையுமிழ் கனிபொருவ வெடுத்தவாய்ப் பெய்தனனுட் சென்ற வேந்த

MAHAMAHOPADHYAYA
Dr. U.V. SWAMINATHA IYER LIBRARY

னானையமை வச்சிரத்தா னுடல்கிழித்து வெளிவந்தா னெழுந்தான் மாற்று
னேனையசு ரர்களதுகண் டிரிந்துநடு நடுங்கியோட் டெடுத்தா ரன்றே. (௧௬)

விதியுரைத்த படியவனை வென்றிடலும் பிரமகத்தி மேவிச் சூழ்ந்து
கொதுகொதித்துப் பிடர்பிடித்துத் தள்ளியெயி றதுக்கிநிலை குலைய மோத
மதிமிகுத்த வாண் டளப்பான் றாள்பணிந்தென் செய்வலினி வள்ளா லென்று
றுமிகுத்த நாரதனை யடையென்று னன்னவனைத் துருவிக் கண்டான். [ன்

கணைபணிந் தடிகேளிக கடும்பழிதீர்த் தருளென்று கரைந்து வேண்ட
வண்டுபடு நறுங்கன்னி வானுடை நிலவுலகின் வருகா வேரி
யண்டுபடு நடுவாக மண்ணிநதி யொன்றுளதா லதன்றீ ரத்திற்
றெண்டுபடு மவர்க்கினிய மதூகவன மெனப்புகலோர் சூழ லுண்டால். (௧௮)

அத்தலத்தி லெண்ணிறந்த முனிவர்குழா மேத்தெடுப்ப வருள்சான் மேன்மை
யெத்தலத்தும் பெறற்கரிய படிக்கரைநா யகனிருப்ப னெழிலன் னனேர்
முத்தலத்து மரியதெனும படிபிரம தீர்த்தமொன்று முகிழ்ததுத் தோன்று
நித்தலத்து விதஞான யோகருமத் தடந்தீர்த்த நீங்கார் சூழ்வர். (௧௯)

அன்னபெருந் தீர்த்தமூழ் குறினிதுமட் டோபழியோ ரயுதமேனு
மின்னவிடம் போயதெனத் தெரிவரிதா யொழிந்தகலு மேந்தா னீயான்
சொன்னபடி யங்கடைந்து முழுகென்று னவன்பாதந் தொழுது போற்றி
மன்னவனும விடைகொணடு மதூகவனத் திடைப்புகுந்தான் மகிழ்ச்சியோங்க.

பிரமதீர்த் தம்படிந்தா னப்பொழுதே பிரமகத்தி பெயர்ந்து போய
துரவுசான் மகிழ்ச்சியுட னுங்கமர்கண் ணுவமுனிதா னுவந்து தாழ்ந்து
பரவுபே ராலயத்துப் புகுந்துநட குஞ்சரதத்தைப் பணிந்தெல் லாமாய்
விரவுபடிக் கரைநாதர் தமமையம்மை யொடுங்கண்டு மேவித் தாழ்ந்தான். ()

ஆனுத பெருமகிழ்ச்சி தலைசிறப்பச் சிலநாளங் கமர்ந்து போற்றி
வானுடு புகுந்துபெரு வாழ்க்கையொடு மருவினன் மகவா னின்னு
மூனுடு படைவேந்தே மூடிகமொன் றத்தீ த்தத் துறைநீர் தோயப்
பானுடு தெய்வவுருப் படைத்ததன் பெருமையெவர் பகர்வா ரென்றான். ()

இந்திரன் பழிதீர்ந்தபடலம் முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் - ௨௩௧.

# மூடிகம் தெய்வரூபம்பெற்றபடலம்.

உத்தம வறமைந்த னுரோமச முனிபாதம்
பத்தியிற் றொழுதேத்திப் பார்கெழு மூடிகமொன்
றத்தடப் புனலுறையால் வானவ னாயதென்று
யெத்திற மதுவிரித்தி யென்னவம் முனிகூறும். (௧)

கிளர்தரு கௌசிகவங் கிசத்தினி லவதரித்தோன்
பளகறு குணவீர பத்திர னெனுமறையோன்
றளவமர் நகைமனைவி சாற்று சுசீலையென்பாள்
வளமுற விருவர்களு மருவினர் வாழ்நாளில். (௨)

புத்திர னின்மையினாற் புந்திநொந் தொருவீர
பத்திரன் மனைவியொடும் பகீரதிக் கரையடையா
அத்திர விழிமடவா யருந்தவ நான்புரிவேன்
சித்திர மெனவென்பாற் றிருந்துற வமரென்றான். (௩)

தொழுகுல வரன்வார்த்தை சுசீலையுந் தலைக்கொண்டு
பழுதற மருங்கிருந்து பணிவிடை புரிநாளில்
விழுதைசெய் தீவினையொன் றெய்தமந் தாகினிவாய்க்
கொழுமலர்க் குழல்சென்றாள் குளிர்புன லாடுதற்கு. (௪)

வளர்பெருந் தவப்பரத்து வாசர்தங் கோத்திரத்தன்
களமில்சி ரீடபத மாமுனி கான்முளைதா
னுளநிலை தவிர்வீர பாதனென் றொருவிடலை
கிளர்மத னுருக்கொண்டு கிடைத்தெனப் பொலியழகன. (௫)

வாயிசை யதுபாட மாதர்கண் விழிசெல்லத்
தோய்தரு சந்தனங்கத் தூரியெங் குங்கமழ
வாய்தரு மலர்மாலை யணிமுடிச் சிகழியனாய்
வேய்புகழ்ப் புனற்கங்கை மேவினன் றன்னியல்பப. (௬)

வந்தவன் மதிமுகமும் வரைபொரு தடந்தோளுந்
சந்தனங் கமழ்மார்புந் தடநெடுங் கரதலமுஞ்
சுந்தர முழுவதுந்தோந் திவளவ ளியிற்றோன்று
மிந்திர குமரன்கொ லெனமருண் டனளனையாள். (௭)

சொல்லரும் பெருங்காமஞ் சுசீலைக்குச் சுரந்தெழவு
மல்லல்செய் மதவேளு மருகுநின் றலர்வாளி
பல்லவு மெடுத்தெய்தான் பதைபதைத் தனள்சோர்ந்தாள்
வெல்லுந ரெவர்காம மெய்யுணர் விலராயின். (௮)

சோர்ந்தவள் விழுவாள்போற் றூநதிப் புனல்வீழ்ந்து
வார்ந்தவிப் புனல்வீழ்ந்தேன் மற்றெனைக் கரையேற்றி
னார்ந்தவின் புகழுண்டா மில்லெனிற் பெண்பழியாஞ்
சார்ந்தமெய் யழகாவென் றழைத்தன டவக்கூவி. (௯)

கரைமிசைத் தனிநின்ற காமுக மறையோனும்
விரைதரத் தண்புனலில் வீழ்ந்தனன் காதலினு
னுரைசெயு மவள்கரந்தொட் டொய்யென மார்பணைத்தான்
றிரையமு தனையாளுஞ் சேர்த்தவன் றனையணைத்தாள் (௧௦)

...UPADHYAYA
Dr. U. V. SWAMINATHA IYER LIBRARY

இருவரு நிலைநீரி லிவ்வணங் கலப்பெய்தி
வெருவரு நீரினராய் வெளிக்கரை மேலிவர்ந்தா
ரொருவரு மன்றுமுத லோரெழு நாள்காறு
மருவரு மவள்கொங்கை மார்புறத் திளைத்தனனால். (கக)

பனவர்தங் குலவீர பாதனப் பாதகத்தான்
மனனமர் பெருந்துயரும் வறுமையுங் கொடுநோயு
மினமென மேன்மேல்வந் திடர்செய நிலைதளர்ந்து
தனதெழி லறமாய்ந்தான் றீவினை தடுப்பவரார். (க௨)

வந்தவத் தீவினையான் மாய்ந்தும தூகவனத்
தெந்தநற் பவத்தியற்றும் புண்ணிய மென்னேயோ
முந்தவோர் மூடிகமாய்ப் பிறந்துபன் முனிவர்சூழா
நந்தநன் கமர்பிரம தடக்கரை நண்ணினனால். (க௩)

அத்தின மேடமதிப் பூரணை யதுவாகப்
பத்தியி னுயிடையே பன்முனி வரர்போந்து
சுத்தியின் மூழ்குநருஞ் சூழ்தருப் பணமாதி
கித்திய மாற்றுநரு மாயினர் நிரந்தெங்கும். (க௪)

மெய்யைமண் ணுதிகளால் விதிவழிச் சுத்திபுரிந்
தையநம் பரனைநினைந் தாடுந ரொருபாலாங்
கையமை பொருளளவைக் கேற்பன கரைதான
முய்யநன் மறையோருக் குதவுந ரொருபாலாம். (க௫)

சிவபர னடியிரண்டுஞ் சிந்தையி னுறப்பதித்தே
யவமற வொருதறிபோ லமர்பவ ரொருபாலா
முவமையி லனையபிரா னுள்ளிய குறிப்பூசை
இவர்தரு விருப்பொடுசெய் திருப்பவ ரொருபாலாம். (க௬)

பொருளது பெறுதல்குறித் தாடுநர் பொலிவொருபான்
மருளிரி யறம்வேண்டி மூழ்குநர் மாண்பொருபாற்
சுருள்குழ லியர்வேண்டிக் குடைபவர் தொகையொருபா
லருளமை கதிவேண்டிப் படிபவ ரமைவொருபால். (கஎ)

மகவுயிர்த் திடன்மதித்துங் கல்வியை யுறமதித்துஞ்
சகமளித் திடன்மதித்துந் தவாவலி யுறன்மதித்து
மிகல்புரி பகையினர்கெட் டிரிதர லதுமதித்துஞ்
சுகமிகப் படிந்தாடித் துளைபவ ரெண்ணிலரால். (க௮)

கோவளிப் பவரொருபாற் குறையற விளைபுலனும்
பூவளிப் பவரொருபாற் பொலிதரு கடுநடைய
மாவளிப் பவரொருபால் வளமலி சிவலிங்கத்
தேவளிப் பவரொருபாற் றீர்த்தத்தின் கரையெங்கும். (க௯)

இன்னன நிகழ்காலை யிருந்தவத் தூயர்மேலோன்
மின்னகு சடைமோலி விபாண்டக னெனுமுனிவன்
பன்னரு மத்தீர்த்தம் படிந்தனன் செபஞ்செய்தான்
துன்னருந் தானக்கோ துமையரு குறவமைத்தே. (௨௦)

அத்தகு கோதுமைதா னருகிருப் பதுநாடிக்
கொத்தமை தாக்கவர்ந்து மூடிகங் கொறித்திடலும்
வித்தக முனிகண்டு மற்றது விலகிடுவான்
வைத்ததன் கமண்டலநீர் தெளித்தனன் மலர்க்கையினால். (௨௧)

அப்புனல் பிரமநறுந் தடப்புன லாதலினா
லொப்பறு மொருதிவலை யுறப்பெறு மூடிகமுந்
தப்புறு மவ்வுருவந் தணந்தொரு தெய்வவுருத்
திப்பிய முறவடைந்த தியாவருஞ் சிந்தைசெய. (௨௨)

முனிவர னதுகாணூஉ மூடிக வுருநீங்கிப்
பனிவிசும் பமர்தேவாய் நின்றனை பழுதில்லா
யினிநின துறுவரவென் னியம்புதி யெனக்கென்னக்
கனியெழில் வடிவமரன் கட்டுரைத் திடலுற்றான். (௨௩)

முன்னொரு மறையவன்யான் முற்றிய தீவினையா
லன்னமென் னடையுடையா ளாயவொர் பார்ப்பனியைத்
தன்னமும் பிறன்மனையென் றெண்ணிலன் றழுவியதா
லின்னல்கொண் மூடிகமா மிவ்வுருத் தாங்கினனே. (௨௪)

இத்தகு பிரமதடத் திரும்புனல் கமண்டலத்தில்
வைத்ததிற் சிறிதள்ளி யென்மிசை வந்துவிழ
வுத்தம நீனுவு மோதரும் பெரும்பேற்றால்
வித்தக வமரவுரு மேவின னென்றுரைத்து. (௨௫)

பளகறு கோயில்புகூஉப் படிக்கணை நாயகனை
வளரரு ளுருவாய மங்கல நாயகியைத்
தளர்வற வமுதகடந் தாங்கிய கரத்துமையை
யுளபிற மூர்த்திகளைப் பணிந்துவப் புறுபோது. (௨௬)

நிகரரு மிருப்பைநறு நிழலமர் பெருமானார்
புகர்தவிர் பேரருளாற் பொன்செய்வி மானமொன்று
பகர்பெருங் கணங்களொடு பார்வர வதின்மேவித்
தகரருஞ் சிவலோகஞ் சார்ந்தினி தமர்ந்தனனே. (௨௭)

ஒருதுளி மேல்விழலான் மூடிக முருமாறித்
திருவமர் தெய்வவுருச் சிவனுறு சிவலோகம்
வெருவற வொளிகாலும் விமானத்திற் சென்றதெனிற்
பொருவரு மத்தீர்த்தப் புகழளப் பதற்காமோ. (௨௮

MAHAMAHOPADHYAYA,
Dr. U. V. SWAMINATHAIYAR LIBRARY

எண்ணிய வெண்ணியவா றெய்துபு மாமுனிவர்
கண்ணிய மண்ணிப்படிக் கரையமர் பெருமான்மு
னண்ணிய பெருந்தீர்த்த நயந்துபொன் முதற்றானம்
பண்ணிய வன்பினராய்ப் படிந்தினி தாடினரே. (௨௯)

மலரவன் புரிதீர்த்த மான்மிய மென்னுரைக்கேன்
பலரிழி யொருகுட்டி பரிந்துவந் ததின்மூழ்கி
நலர்துதி புரியுருவ நண்ணின னென்றுரைத்தான்
கலர்மரு வருஞ்சீர்த்திக் காமரு மாதவனே. (௩௦)

முடிகம் தெய்வருபம்பெற்றபடலம் முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் - ௨௬௧.

# கந்தருவன் பிணிநீங்குபடலம்.

தருமனென் பவன்பெருந் தவத்து மாமுனி
மருமலர்ப் பதந்தொழு தெழுந்து வள்ளலே
யொருவருங் குட்டிதன் வரவை யோதெனப்
பொருவிலம் முனிவரன் புகறன் மேயினான். (௧)

திருவமிக் குற்றகந் தருவன் சீர்த்திசா
லொருபெயர் துந்துவென் றுரைக்கப் பட்டவன்
மருவுதன் னுலகொரீஇ மண்ணில் வந்தனன்
பொருவுபல் வளங்களின் பொலிவு நோக்கவே. (௨)

வந்தவன் யமுனையென் றுரைக்கு மாநதிச்
சந்தவண் கரைமிசைத் தனியு லாவுபோ
தெந்தநல் வினைகளு மிரியல் போயிட
முந்தநற் றவஞ்செயோர் முனிவன் வைகினான். (௩)

வற்கலை யுடுத்தவன் வார்ந்த வேணிய
னொற்கமி லுணர்ச்சிய னூர்த்த வாகுவன்
பற்கழல் பருவத்தன் படிம யாக்கைய
னற்கழன் மனத்தின னனைய மாமுனி. (௪)

இருப்பது கண்டுநே ரெய்தித் துந்துவும்
விருப்பொடு வணங்கிடு வேட்கை தீர்ந்தவ
னுருப்பொலி கோலங்கண் டிறந கைத்தனன்
கருப்பயில் வொழித்தவன் கனன்று நோக்கியே. (௫)

உருவுகண டெள்ளுத லொண்மை யன்றெனு
மருவுசான் றவருளை மறுத்த பாவிநீ
வெருவுபுண் ணுடம்பெலாம் விரவக் குட்டநோ
யொருவறக் கோடிபல் லுயிர்ந கைக்கவே. (௬)

என்றனை னென்னாமுன் னெய்தி யந்தநோய்
வன்றிற லெழிலிழந் துருவு மாறுபு
கன்றிய மனத்தனாய்க் கசிந்து தாடொழு
தென்றனிப் பிழைபொறுத் தருடி யென்றனன். (௭)

துந்துவென் பவன்படு துயர்க்கி ரங்கியே
நந்துநற் றவமுனி நலியு மிந்தநோய்
முந்துற வகற்றுமான் முதல்வன் மேவுதென்
வந்துவந் தியலொரு மதூக மாபுரம். (௮)

பெயர்வரு மத்தலப் பிரம தீர்த்ததின்
மயர்வறு சித்திரை மதியிற் பூரணை
யயர்வற வருபொழு தாய்ந்து மூழ்கினிவ்
வுயர்பிணி பிறவியோ டொழியு மென்றனன். (௯)

அன்னவன் பதந்தொழு தடிய னுய்ந்தனே
னென்னநன் கிசைத்தெழுந் தினிது நாடியெ
தன்னமர் விருப்பொடு வந்து சார்ந்தனன்
மன்னலந் தருபெரு மதூக மாநகர். (௧௦)

அழுகிய வுறுப்பின னாக்கை யெங்கணு
மொழுகிய சீயின னுடற்றும் புண்ணின
னிழுகிய வரக்குநீ ரியலை சொட்டிடு
முழுகிய வடைந்தனன் மொழிந்த தீர்த்தத்தே. (௧௧)

கண்டவ ருருவருத் தகலக் கண்கணீர்
கொண்டவன் சித்திரை குலாய திங்களி
லெண்டரு பூரணை யெய்தி மூழ்கினான்
மண்டலம் புகழ்விதி வகுத்த தீர்த்தத்தே. (௧௨)

முழுகிமே லெழுதலு மொய்த்த புண்ணொடு
மொழுகிய கறைமுத லொன்றுங் கண்டிலா
னெழுதருந் திப்பிய வுருவ மெய்தினான்
விழுமிதென் றியாவரும் வியந்து நோக்கினார். (௧௩)

முடிக்களை மதிபுனை முதல்வ னாகிய
படிக்களை நாதனைப் பணிந்து போற்றியே
வடிக்கருங் கண்ணுமை மலர்ப்ப தந்தொழாக்
கொடிக்கருந் தன்னகர் கூடி வாழ்ந்துபின். (௧௪)

சிவபுர மடைந்தனன் றிசைமு கத்தவ
னவமற வாற்றிய வனைய தீர்த்தத்தி
னுவமையி னளனுமுன் னுடறு மூழ்கினன்
குவலய பாலதே றென்று கூறினன். (௯௭)

கந்தருவன் பிணிநீங்குபடலம் முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் - உ௭௩.

## நளன் கலிநீங்குபடலம்.

குந்தி மைந்தன் குலமுனி தாடொழா
மூந்தி யோர்நளன் மூழ்கின னென்றனை
சிந்தி டாதக் கதையையுஞ் செப்பென
நந்தி யோகை நவிலலுற் றனரோ. (௧)

கூடு சோலை குலாய நிடதத்தி
னூடு மாவிந்த மென்னு மொருநகர்
நீடு செங்கோல் செலுத்து நெறியினன்
மாடு வாய்ந்த மதிகுல மன்னனே. (௨)

வீர சேன னளித்த விடலைமுத்
தார மார்பின னய்பெருங் கல்வியான்
கார வாவு கொடைத்தடக் கையினு
னூர வாவு நளனெனு நாமத்தான். (௩)

ஓதி மஞ்சென் றுரைத்த மொழியினன்
மேதி னிக்கண் விளங்கு விதர்ப்பத்திற்
கோதி லாக்குண் டினபுரத் தெய்தினு
னாத ரத்தி னனிக நெருங்கவே. (௪)

பாரும் விண்ணு முவந்து பராவுசீ
ராரும் வீம னடைந்த வரத்தினாற்
சாரு காசினி பெற்ற தமயந்தி
யோரு மன்ற னுவப்பப் புரிந்தபின். (௫)

முன்னர் நேர்ந்து முனிந்துவெம் போர்புரி
யன்னர் தோள்வலி யாவயின் மாற்றியே
நன்னர் மாதொடு நண்ணு படையொடு
மன்னர் மன்னவன் மாவிந்த மெய்தினன். (௬)

வண்ணம் வாய்ந்த தமயந்தி மாமுலை
யண்ணல் கூடி யகமகிழ் வெய்துநா

ளெண்ணம் வாய்ப்ப வெழுந்தொரு புட்கரன்
கண்ண மேவு கலியோ டடைந்தனன். (எ)

அனைய னோடொட்டி யாடிய சூதினாற்
புனைய வல்ல புகழ்மிகு நாடுமு
னினையு மியாவையு நீயெனத் தோற்றுத்தன்
மனைவி யோடு வனம்புகுந் தானரோ. (அ)

மக்கள் வீம னகர்வைக முன்வைத்தோன்
றொக்க கானிற் றுணைவியுந் தானுமாய்
மிக்க செல்லலின் மேவுறு நாளனம்
புக்க தாடை கவர்ந்தது போயிற்றே. (௯)

ஆடை யொன்றிரு வோரு மரையுடீஇ
வாடை வந்து வருத்திட வைகுவார்
பேடை நித்திரை யோர்ந்து பிறங்கிரு
ளோடை மாகளிற் றண்ண லொருவினான். (௧௦)

பாதி யாடைப் பசுங்கொடி கண்விழித்
தோதி சோர வொருவழிக் கொண்டன
ளீதி யில்லவன் றன்னை நெருப்புண
வாதி யென்றடைந் தாடந்தை யூரரோ. (௧௧)

மனையை நீத்தவன் மாசுணத் தான்மத
னனைய தன்னுரு மாறி யயோத்திசேர்ந்
தினைய மெல்கி யிருதுபன் னன்னிடைத்
துனைய வாகுவ னாய்ப்பரி தூண்டுவான். (௧௨)

அன்ன நாட்டம யந்தி சுயம்வர
மென்ன லோர்ந்தவ் விருதுபன் னன்னெழ
மன்னன் றேர்ப்பரி தூண்டி மதூகம்வாழ்
நன்ன ராரணி யத்திடை நண்ணினான். (௧௩)

மேட மாமதி மேவிய பூரணை
நாட நின்றநன் னாளுமன் றுதலா
லாட மேவவ ரோடடைந் தாடினான்
பீட மைந்த பிரமநற் றீர்த்தமே. (௧௪)

ஆய போதி லகன்றது வெங்கலி
பாய தான்றியின் பச்சிலை யெண்ணுறு
மேய வித்தையவ் வேந்தன்பாற் பெற்றன
னேய வீம னிடையடைந் தானரோ. (௧௫)

அங்கு முன்னுருத் தோற்றி யணங்கொடு
பொங்கு தன்னகர் புக்கொரு புட்கரன்

மங்க வென்று மகிதல முற்றுங்கொண்
டங்க ணுண்டன னண்ண னளனரோ. (௧௬)

கலிது ரந்துமண் காக்குந் திருவரு
ளொலி புனற்றட மும்பிய ரோடுநீ
பொலிய வாடிப் புராணனைப் பூசிப்பின்
மெலிவி லென்று விளம்பி விடுத்தனன். (௧௭)

நளன் கலிநீங்குபடலம் முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் - ௨௯௩.

# பாண்டவர் பூசைப்படலம்.

விடையருண் முனிவன் பாதம் விருப்பொடு பணிந்து போற்றி
நடைகெழு தரும னாதி யைவரு நறும்பூச் செற்ற
தொடைமலி கரிய கூந்தற் றுருபதன் மகளு மேன்மை
யுடையவா ரியனுங் கூடி யுயர்வழிக் கொண்டா ரன்றே. (௧)

வழியுள தலங்க ளெல்லாம் வணங்குபு போற்றிப் போற்றி
மொழிதரு வடகா வேரிக் குடிஞைத்தென் கரையை முன்னி
யொழிவில்பல் வளங்க ளோக்கி யொளிர்புன னண்ணி மூழ்கிப்
பழிதவிர் தெய்வ மண்ணிப் படிக்கரை யுற்றா ரன்றே. (௨)

மேவிய லொருங்கு பெற்ற மதூகமுஞ் செழித்த கொன்றைப்
பூவியல் சடையா ரைந்து புகழ்மிகு குறியு மேலோர்
நாவியல் சீர்த்தி யம்மை நல்வடி விரண்டு மைந்து
காவியல் கரக்கூத் தாடு களிறுமாங் கொளிரக் கண்டார். (௩)

அண்ணற னெதிரே நாளு மமைந்தொளிர் பிரம தீர்த்தக்
கண்ணகன் றடமுங் கண்டார் பற்பலர் கருதி வந்து
நண்ணுமத் தீர்த்தந் தோய்ந்து நாயகற் றொழவுங் கண்டா
ருண்ணகு களிப்பு மேவ வுற்றதங் கவலை காணார். (௪)

வறியவன் றனக்குச் செம்பொன் வைப்பிடந் தெரிப்பார் போலத்
தறிதுயர் மூழ்க வுற்ற நமக்குமித் தலந் தெரித்து
மறிதலில் வழியுங் காட்டு மாமுனி யுரோம சற்குப்
பிறிதெவன் செய்ய லாவ தென்றுபே ருவகை பூத்தார். (௫)

தங்குலக் குரவ னான தவுமிய முனிவ னென்பான்
பொங்குபைந் தருப்பை நல்கிச் சங்கற்பம் புகலப் பெற்று
வெங்குண மில்லா வைந்து வேந்தரு மனைவி யோடு
தங்குநற் பிரம தீர்த்தத் தடம்புகுந் தாடி னாரே. (௬)

வெள்ளிய நீறு பூசி விளங்குகண் மணியும் பூண்டு
வள்ளிய வெழுத்தோ ரைந்து மனனுறக் கணித்தல் செய்து
துள்ளிய வுவப்பு மேவ மனுாகத்தைச் சூழ்ந்து தீமை
தள்ளிய வொருகூத் தாடும் பிள்ளையைச் சார்ந்தா ரன்றே. (௭)

மலரவன் றீர்த்த மாட்டி மலர்பல வெடுத்துச் சூட்டி
யலர்சுவைக் கனிகா யூட்டி யமைதரப் பணிந்து போற்றிப்
பலர்புகழ் பெரும யாங்கள் பண்ணுபூ சைக்கூ றின்றி
யுலர்தலில் லருள்செய் யென்று வேண்டியங் கொருவிப் போனார். (௮)

நான்முக னமைத்த தீர்த்த நலங்கொண்மஞ் சனமக் கானுட்
டேன்முகங் கவிழ்க்கும் பல்பூச் சீறிலை வில்வஞ் சந்தம்
வான்முகந் தவழுஞ் சோலை மதுப்பொழி கனிகா யாதிப்
பான்முகத் துள்ள யாவும் பயப்பய வீட்டிக் கொண்டார். (௯)

ஐவருட் டரும னென்பா னளவிலன் புருவே யாகிப்
பைவரு பணிப்பூண் வேணி நீலகண் டேசர் பாத
மைவரு பிழை புகுது வயங்கறால் விதியி னூற்றுற்
கைவரு தொழிற்பே றெய்தக் கசிந்துளம் பூசித் தானே. (௧௦)

வாங்குவில் விசய னென்பான் படிக்கரை நாத வள்ளல்
பாங்குசெய் பதுமப் பூந்தாள் பற்பல மலர்க ளேவி
யோங்குபே ரன்புந் தானும் வேறென வுரையா வண்ணந்
தீங்குதீர் மனுக்க ளோதித் திருத்தகப் பூசித் தானே. (௧௧)

விறலுடைத் தண்டங் கொண்ட வீமனென் பவனு காயத்
தறலுடைச் சடில மோலி யருண்மக தீசன் பொற்று
ணூறலுடை யன்பு தோன்றிற் றொடுங்கிற்றென் றுரையா வண்ணம்
விறலுடை யுறுதி பூண்டு விளங்குறப் பூசித் தானே. (௧௨)

வாம்பரி நகுல னென்பான் மருதபே ரன்பு பூண்டு
பாம்பரி யதண்மே லார்த்த திருவரைப் பரமே சன்பொற்
றேம்பரி கமலப் பூந்தாள் செழுமல ராதி கொண்டு
நாம்பரி விரண்டு நீங்க நலத்தகப் பூசித் தானே. (௧௩)

கலையுணர் சிறப்பார் வித்தக் ன்சகா தேவ னென்பா
னிலையுணர் முனிவர் போற்ற நிகழுமுத் தீசன் வேதத்
தலையுணர் பதுமப் பூந்தா டண்புனன் மலர்கைக் கொண்டு
புலையுணர் வொழிய வன்பு பொலிதரப் பூசித் தானே. (௧௪)

குலம்புரி சிறப்பு வாய்ந்த கோற்றொடி யொருபாஞ் சால
னலம்புரி தவத்து வந்தா ளண்ணுபே ரன்பு பொங்க
வலம்புரி புனல்பூ வாதி யங்கையிற் றழுவித் தெய்வ
வலம்புரிக் களிற்றை வாழ்த்தி வணங்குபு பூசித் தாளே. (௧௫)

குரவனித் தலத்தின் றென்பாற் குலவுபுன் ஞாக நீழல்
பரவவீற் றிருக்கு நாக நாதர்தம் பாத மாங்கு
விரவுமா நாக தீர்த்தம் விதிப்படி தோய்ந்தெ ழுந்து
கரவுதீர் பூசி ராதி கைக்கொடு பூசித் தானே. (கசு)

பின்னரும் பிரம தீர்த்தம் பெரும்புகழ்க் குரவ னுடிப்
பன்னரு மதூக நீழற் பரமனைப் போற்றி வாழ்ந்தா
னன்னரு நாக தீர்த்த மாடிப்பூம் புன்னை நீழ
லென்னரும் போற்ற வைகு மிறைவனைப் போற்றி வாழ்ந்தார். (கஎ)

இனையரிவ் வாறு பூசை நித்தலு மினிதி னாற்றி
நனையமை பன்ன சாலை நயந்தவ ணன்று செய்து
புனையமிக் கமைந்த சீர்த்திப் புரவல ராயி னாரும்
வனையமை யழகி னாருங் குரவனு மருவி வாழ்நாள். (கஅ)

மயரறும் வான நாடர் மாதவத் துயர்ந்த மேலோ
ரயரறும் புவியி னுள்ளார் யாவரு மடைந்து மூழ்க
வுயரரும் பேறு நல்கு மொப்பிலாப் பிரம தீர்த்தம்
பெயராற நச்சுப் பொய்கை யெனும்பெயர் பெற்ற தென்றான். (கசு)

என்றுரை செய்த சூத மாதவ னிருதாள் போற்றி
நன்றுரை செய்தா யைய நான்முக னமைத்த தீர்த்த
மன்றுரை யாடா நச்சுப் பொய்கையென் றாய தென்னே
யின்றுரை செய்தி யென்றார் சூதனு மியம்பப் புக்கான். (உo)

பாண்டவர் பூசைப்படலம் முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் - நகங.

# நச்சுப்பொய்கைப்படலம்.

வழுவறு பழிக்கு நாணான் வாளரா வுயர்த்தோன் றீமை
தழுவிய சகுனி துச்சா தனன்முத லோரை நோக்கிப்
பழுதுபட் டெல்லாந் தோற்ற பாண்டவர் மனையோ டெங்குக்
கெழுமின ரறிந்து வம்மி னென்றனன் கேடு சூழ்வான். (க)

அன்னவ னுரைத்த வாறே யனையரத் தொழின்மேற் கொண்டு
பன்னருங் கானுங் குன்றும் படர்நதிக் கரையுந் தேடி
மன்னுதண் சோழ நாட்டின் மதூகமா வனத்து மேவித்
துன்னுற விருப்பார் தம்மைக் கண்டுபோய்ச் சொல்ல லுற்றார். (உ)

அரவுடைக் கொடியாய் கேட்டி யைவரு மனைவி யோடும்
புரவுடைச் சென்னி நாட்டிப் பொன்னிமா நதிக்கு நாப்பண்

விரவுடை மண்ணி யாற்றின் மிக்குயர் கரைப்பால் விண்ணோர்
வரவுடைத் தான மாய மதூகமா வனமொன் றுண்டால். (௩)

அத்தகு வனத்திற் பன்ன சாலையொன் றமைத்துக் கொண்டாங்
குத்தம தீர்த்த மொன்றுண் டுதயத்தி னந்நீர் மூழ்கி
வித்தக முனிவர் சூழ விழைசிவ பூசை யாற்றித்
தத்தமுண் மகிழ்ச்சி மேவித் தவாதிருக் கின்றா ரென்றார். (௪)

என்றது மழுக்கா றெய்தி யின்னமு மிறவா ராகி
நன்றிருந் தனரோ வென்று நைந்துளம் புழுங்கி யாய்ந்து
கன்றுநெஞ் சினனாய் மாயக் கருவிடங் கவர்ந்து நீவிர்
சென்றவர் முழுகி யுண்ணுந் தீர்த்தத்திற் கலப்பீ ரென்றான். (௫)

பாவிசொற் படியே தீமை பயின்றிடு சகுனி முன்னோர்
மேவிய கொடிய தீய வெவ்விட நனிக வர்ந்தே
காவியங் கண்ணா ளோடு கண்ணுதற் பெருமான் மேய
வாவிநீ ரோடை சூழு மதூகமா வனம்புக் காரே. (௬)

புக்கவ ரிரவி னூடு பொள்ளென மறைந்து சென்று
தக்கவர் புகழா நிற்குஞ் சதுமுக தீர்த்தந் தன்னிற்
கைக்கவர் கொடிய தீய விடமெலாங் கலத்தல் செய்தார்
மைக்கவர் படர்ந்தா லென்னப் படர்ந்தது மாநீர் முற்றும். (௭)

பாலுறு பிறைபோ லெங்கும் பரவிய தன்மை தேர்ந்து
மாலுறு மனத்தர் காலை வந்துநீர் மூழ்கு வாரேற்
கோலுறு முயிர்தப் பார்காங் கோளராக் கொடியி னான்பா
லேலுறு முவகை சொல்வ மெனநினைந் தெழுந்து போனார். (௮)

தீயவர் போன பின்பு தினகர னுதய மாக
நேயமார் பன்ன சாலை நின்றெழுந் தைவர் தாமும்
பாயமே கலையி னாளும் பரவுமா ரியனும் போந்தார்
தூயமா தீர்த்த மாடத் துணிந்திரா நடந்த தோரார். (௯)

இவர்துறை வருமுன் னாக வெம்மையா ளுடைய தேவி
தவலருங் கருணை பொங்கத் தனிவெளி வந்து நின்று
கவலருங் கணவ னாரைக் கைதொழு தழைத்தா ளன்னொ
ருவமையின் மடவா யுற்ற தோதென வெளிவந் தாரே. (௧௦)

வந்தவர் தம்மைப் போற்றி வள்ளலை நினைப்பூ சிக்கு
மந்தமி லன்பு சான்ற வைவரு மிறக்கும் வண்ணஞ்
சிந்தனை செய்து தீயோர் தீர்த்தநஞ் சிட்டா ரென்றா
னந்தமை யாளுங் கோமா னகைத்திது கூற லுற்றான். (௧௧)

நம்மடி யவரை யிந்த நஞ்சுசெய் வதுமொன் றுண்டோ
வம்மலர்க் குழலாய் நீநின் னருட்கணோக் கிடினும் போதுஞ்

செம்மலர் பொருவு நங்கைத் திருந்துநீ ரிடினுஞ் சாலுங்
கொம்மென விரண்டு மின்று வேறென்று கூடச் செய்வாம். (கஉ)

முத்தநேர் நகையா யின்று முதலுல குயிர்கட் கெல்லாஞ்
சுத்தநீர் விராய நஞ்சஞ் சுவையுடை யமுதே யாக
வொத்தபே ரருள்செய் தோமென் றுரைத்துமை யவள்கைப் பற்றி
யத்தன்மெய் யுருக்க ரந்தா னவருந் துறையை யுற்றார். (கந)

துறையடைந் தவர்க டீர்த்தந் தோற்றம்வே றுருவ நோக்கி
நிறைதரு மையங் கொண்டு நின்றன ரன்ன காலை
யிறைவனு காய வாக்கா லெம்மடிக் கன்பு பூண்டீர்
மறையவந் துங்கண் மாற்றார் வல்விடங் கலந்தா ரென்னல். (கச)

அதுநம திடப்பால் வைகு மாரணங் கெமக்குக் கூறக்
கதுமென வமிர்த மாகக் கருணைசெய் தனமின் றாதி
முதுவிடஞ் சுத்த நீரிற் கலக்குமேன் முறிந்து போகப்
புதுவர மளித்தோ மென்று புகன்றனன் புகழ்சால் பெம்மான். (கரு)

அருண்மொழி செவியிற் கேட்ட வைவரு மேனை யோரும்
பொருண்மொழி சிவபி ரானார் பொங்குபே ரருளைப் போற்றித்
தெருண்மொழி யதனு னச்சுப் பொய்கையென் றொருபேர் செப்பி
மருண்மொழி யனுக்குந் தீர்த்த மகிழ்ந்தினி தாடி னாரே. (கசு)

ஆடிமுன் போல வைய ரருட்குறிப் பூசை யாற்றி
நாடியங் கிருந்தார் நச்சுப் பொய்கையென் றுரைக்கு நாம
நீடியத் தீர்த்தம் பெற்ற தத்தின முதனே ராரைக்
கூடிவேந் தடைந்த மேன்மை கூறுதுங் கேண்மி னென்றான். (கஎ)

நச்சுப்பொய்கைப்படலம் முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் - ருநடு0.

# பாண்டவர் அருள்பெறுபடலம்.

முரச வார்கொடி யோன்முதல் யாவரு மகிழ்ச்சி
விரச மேவுநாட் சித்திரைப் பூரணை மேவ
வரச ரோருக னியற்றிய மாதடம் படிந்து
பரச மேவரு மருட்குறிப் பூசனை பண்ணி. (க)

அடுத்த தென்றிசை நாகதீர்த் தமும்படிந் தாடி
யெடுத்த சூலத்தர் புன்னைநன் னீழல்வீற் றிருப்பார்
மடுத்த பொன்னடிப் பூசனை யினிதுற வயக்கி
விடுத்த தீமையார் மதூகமா வனம்புகூஉ மீட்டும். (உ)

கரிய கண்டனைப் பணிந்தனர் நின்றிடு காலை
மரிய வன்பினீர் நீங்கள்செய் பூசனை மகிழ்ந்தோ
முரிய நும்பதிக் கெய்திநும் பகைமுழு தொழித்துப்
பிரிய மண்புரந் தெய்துவீர் நம்பதம் பின்னர். (௩)

இன்று செல்லுமி னென்றுவிண் வாக்கினா லிசைப்ப
நன்று தாழ்ந்தெழுந் தளவிலாப் பெருமகிழ் நண்ணிக்
கன்று முள்ளநீத் தைவருங் காரிகை மாது
மொன்று பேரருட் குரவனுந் தங்கனா டேற்றார். (௪)

உற்ற காலையிற் சுயோதனன் முதலிய ரொருங்கு
செற்ற மேவமர்க் களத்திடை நேர்ந்துயிர் தீரக்
கொற்றம் வாய்ந்தற மைந்தனே குருமுடி கவித்துக்
கற்ற மேதையா சூழ்தரக் காசினி புரந்தான். (௫)

அளவி லாப்பெருஞ் செல்வத்தி னமைதரு நாளி
லளவி லாத்துய ரடைந்தநா ளருள்பொழிந் தளித்த
வளவி லாவளத் தமைமது கேசனை நினைந்தா
னளவி லாக்குணத் துயரிய வறமக னம்மா. (௬)

நினைந்த காலையிற் செம்பொனும் பன்மணி நிரையும்
வனைந்த பொன்னிழைக் கலிங்கமுங் கவிகைசா மரையு
மினைந்த தன்மையி லானையுங் குதிரையு மிருளை
முனைந்த பேரொளிப் பொன்செய்பாத் திரங்களு முற்ற. (௭)

வேண்டு மியாவையு மிதப்புறக் கொடுதனை விலகா
தீண்டு தம்பிய ரமைச்சர்பல் சேனையு மெய்தத்
தாண்டு மாப்புனை யிரதமேற் கொண்டுதா வாத
பாண்டு மாமகன் வந்தனன் மதுரகநற் பழங்கான். (௮)

வந்து நாயகன் மலரடி பணிந்துபொன் மதில்வான்
முந்து கோபுர முகிலொடு வெழுகருக் கிருக
நந்து மத்தமண் டபமகா மண்டப நலங்கூ
ரிந்து வாணுத லிறைவிய ரிருவர்தங் கோயில். (௯)

நிருத்த குஞ்சரம் வலம்புரிக் குஞ்சர நெடுவேற்
கருத்த னுங்கம ராலயம் பிறகட வுளர்க்குந்
திருத்த மாகிய சினகரந் திருமடைப் பள்ளி
பொருத்த வேள்விசெய் சாலைபொன் பொலிதரு பொதுவே. (௧௦)

வேறு பற்பல விழாக்கொளு மண்டபம் விரைத்து
நாறு தாமரைப் பிரமதீர்த் தப்படி நலஞ்சா
லேறு யர்த்தவர் புன்னைவாழ் பெருந்தளி யின்னுங்
கூறு பற்பல வும்புதுக் கினன்பொருள் கொண்டு. (௧௧)

நல்ல மாமறை யோர்முதற் சாதியோர் நான்குஞ்
சொல்ல மேவிய மற்றுள குடிகளுந் துவன்றிச்
செல்வ மேவுநால் வீதியு மழகுறச் சிறப்ப
வொல்வ தாக்கின னளகையி னகர்பொலி வுறவே. (கஉ)

விடையு மன்னமும் பூதமுங் கைலையும் விளக்க
மடையும் மையமு மானையுங் குதிரையு மணிசால்
குடையு மாலவட் டங்களுஞ் சாமரைக் குலமு
முடையு மாமணிப் பூண்களும் பிறவுமிக் குதவி. (கங)

ஓங்கு சோலையும் விளைநிலங் களும்பல வுதவி
யாங்கு நல்லநா டெரிந்துபொற் கும்பரீ ராட்டி
யேங்கு பல்லிய மெழுகட லினுமுழக் கெடுப்ப
வீங்கு மாமறை வாழ்த்தொலி முகிலினும் விம்ம. (கச)

இலகு சித்திரைச் சட்டியின் விடைக்கொடி யேற்றி
யலகு தீர்பல வாசரு மவண்வர வழைத்தே
யுலகு போற்றிடக் காலையு மாலையு முவந்து
நிலவு மைவரு மூர்திமேல் வருவிழா நிகழ்த்தி. (கரு)

மேய பூரணைத் திதியினில் விதியமை தீர்த்தத்
தாய நூல்வழி யத்திர தேவமை யாட்டிப்
பாய தம்பிமார் பிறரொடு தானுநீர் படிந்தே
தூய வன்றிரா விடைக்கொடி யிறக்கினன் றூயோன். (கசு)

முன்னு மாலயப் பணிபுரி மறையவர் முதலோ
ருன்னும் வேட்கையின் மேற்பட வுடுக்குமா டைகளும்
பொன்னு மாமணிப் பணிகளும் பொலிவிளை நிலமு
மன்னு மாறுநன் குதவினன் வள்ளன்முன் சென்றான். (கஎ)

அங்க மெட்டினு மாறினு மைந்தினும் வணங்கித்
துங்க மிக்கெழு மிடையறு மகிழ்ச்சிமீத் துள்ளப்
பொங்க வன்புகை குவித்தெதிர் நின்றுநற் பொலிவு
தங்க நன்கிவை துதித்திடத் தொடங்கினான் றருமன். (கஅ)

போற்றி மாலய னிருவரு மறிதராப் புராண
போற்றி மாலயன் றலைக்கலம் பூண்டமெய்ப் புனித
போற்றி மாலய னிடம்வல முறவருள் புகழ
போற்றி மாலய னூர்திபா கெனக்கொண்ட புயங்க. (க௯)

அளவி லாதபே ரருளுடைப் புங்கவ சரண
மளவி லாதபல் லுயிர்க்குயி ராயவ சரண
மளவி லாதபே ராற்றலி னமைந்தவ சரண
மளவி லாதபே ரன்புடை யண்ணலே சரணம். (உ௦)

ஐய மெய்த்தவ வுரோமச மாமுனி யருளால்
வெய்ய பாவியே னின்னருண் மேதகத் தெளிந்து
செய்ய வித்தலம் புகுதரச் சிறுமைதீர்த் தருளி
யுய்ய வைத்தநின் கருணையை யுளங்கொளா கின்றேன். (௨௧)

பாவி யாயவ னஞ்சினைப் படியினீர் கலக்கத்
தேவி யாருணா கேட்டலு மமுதமாச் செய்தே
யாவி போகியான் குலத்தொடு மழிதரா வண்ண
மேவி யாரருள் புரிந்தநின் கருணையே விழைவேன். (௨௨)

பருந்து சூழ்தரு முத்தலைச் சூற்படைப் பகவ
திருந்து வானவர் செறிதரு படிக்கணாத் தேவ
பொருந்து மங்கல நாயகி யோடமர் புராண
மருந்து நேரருட் டலைவநின் மலரடி மறவேன். (௨௩)

என்று தோத்திர மியம்பினன் விடைகொடங் கெழுந்து
குன்று வில்லியார் புன்னையங் கோயிலைக் குறுகி
நன்று தாழ்ந்தெழுந் தனைவரு முடன்வர நடந்தான்
சென்று தன்பதி யடைந்தனன் செய்யகோற் றருமன். (௨௪)

பரவு தம்பியர் சூழ்தரப் பல்பகல் வாழ்ந்து
விரவு நீதியே யெவ்விடத் தினுஞ்செல விளக்கி
யுரவு சேர்புயத் தண்ணற னுறுகிளை யோடுங்
கரவு தீர்சிவ புரமடைந் தின்புற்றுக் களித்தான். (௨௫)

பாண்டவர் அருள்பெறுபடலம் முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் - ௩௫௫.

---

# புன்னைவனப்படலம்.

என்றுரை யாடிய சூதனை மாதவ ரெல்லோரு
நன்றுற வாழ்த்தி வணங்கி விளக்குறு நலமிக்காய்
தென்றிசை மேயபுன் னாக வனத்தமர் திருவாளன்
றன்றிகழ் மேன்மை யுரைக்கென வத்தவ முனிசொல்வான். (௧)

எள்ளலில் பாதல மேவிய நாகத் திறையென்பான்
கொள்ளரு மண்சுமை யாற்றவு மிக்க கொழுங்கல்வி
நள்ளவு முள்ள மவாவியிம் மண்ணிடை நகமேவி
வள்ளலை யர்ச்சனை யாற்றிடு பெற்றி மனங்கொண்டு. (௨)

தருதல மெவ்விட முள்ள தெனத்தனி யாராயப்
புகுதரு போதருள் கூடலின் முன்னைப் புவிதந்தான்
மிகுதுயர் தீர்த்தது தெய்வ மதாக வியன்ருரு
நகுதல மென்று தெரிந்தன ரையிடை நண்ணுற்ருன். (ரு)

நண்ணிய சேடன் மலர்த்தலை வானவ னற்றீர்த்தம்
புண்ணிய மேவர மூழ்கி மதாகப் பொலிநீழ
னண்ணிய நாயக னல்லருள் போற்றி நயந்தேத்தி
யண்ணிய தென்றிசை மேயின ருர்வ மருதோங்க. (சு)

பொற்ப வரும்பி மலர்ந்து விரைத்தெழு புன்னைகச்
சொற்பயில் சூழலி லற்புத மான சுவைத்தீர்த்தம்
பற்பலர் சூழ்தர வொன்றினி தாக்கிப் பயிலன்பிற்
சிற்பரன் மெய்க்குறி யொன்று பதிட்டைசெய் தான்மாதோ. (ஒ)

தானினி தாற்றிய நன்னீ ராட்டித் தழைபுன்னைக்
கானியல் பூவுங் கூவிள முந்தழல் கைவைத்தான்
மேனி குளிர்ந்திடு மாமுடி சூட்டி விருப்பேற
வானியி லாதுப ருளுமு ளங்கூர்ந் தருச்சிக்க. (சு)

இறைவன் வெளிப்பட் டெவ்வரம் வேண்டு மியம்பென்னக்
குறையகல் வான்பொற் ருட்டுணை போற்றிக் கோமானே
நிறைதரு மட்சுமை தாங்கெறு ழோடு நிகழ்ந்தோங்குங்
கறையறு கல்வியு நல்குதி யென்று கசிந்தானல். (எ)

பின்னரும் வேண்டுவ னென்பெய ராலித் தலந்தீர்த்த
மன்னர் நிகழ்ந்திட நீயுமென் ஞம நலங்கொள்க
வென்னரு மிப்புன லாடி நினைத்தொழு மியல்புற்ரு
லன்னர் கினைத்தவை யாவு மடைந்துநி னடிசார்க. (அ)

இவ்வர முந்தர வேண்டு மெனத்தொழ வீறில்லா
னவ்வர முற்று மளித்தன மென்றவ் விலிங்கத்தே
செவ்வன் மறைந்தனன் மிக்க மகிழ்ச்சி திளைத்தானு
யொவ்வரி தாகிய தன்பதி சேட னுறாஉவாழ்ந்தான். (கூ)

தலமலிர் தீர்த்த மிலிங்கமிம் மூன்றுந் தணவாமே
நலமலி நாக மெனும்பெயர் முற்கொடு நாளுரு
நிலவுல கத்தி னிகழ்ந்திடு மந்நிம லன்பாகத்
திலகிய தேவி திருப்பெயர் சுந்தர மென்பாரால். (கo)

நாக மருச்சனை செய்துயர் நாக புரஞ்சென்று
நாகம் விரும்புறு நாக தடப்புன னன்ருடி
நாக மணிந்தரு ளுக விலிங்கனை நகுபூக்கொ
ளுக வனம்பொலி சுந்தர வல்லியை நன்கேத்தி. (கக)

வழிபடு வோரெவை யும்பெறு வார்மிக வாய்ப்பார்மார்
கழிவரு பூரணை யத்தட மூழ்குநர் காணென்று
பழிதபு சூத னுரைத்தனன் மாதவர் பல்லோரு
மொழிவரி தாகிய பேருவ கைக்கடன் மூழ்குற்றார். (௧௨)

புன்னைவனப்படலம் முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் - ௩௬௭.

# நீலகண்டப்படலம்.

பகர்பிர மாண்ட புராணத்தி னுபரி பாகத்தின் மொழிந்தன மொழிந்தாம்
புகர்தபு காந்த புராணங்கேத் திரவை பவப்பெயர் பூண்டகண் டத்து
நிகரரு மதூக வனப்பெருங் காதை நிகழ்வன வினிமொழிந் திடுவாந்
தகர்மல வலியீர் கேண்மினென் றெடுத்துச் சாற்றுவன் சூதமா தவனே. (௧)

மன்னுயி ரனைத்துந் தன்னுயிர் போல மதித்திடு கருணையா ளுலகிற், றன்னுவண் புகழான் கவனவாம் பரியான் ஞான்றல்சால் வரைபுரை களிற்றான், மின்னுவெண் குடையான் கல்வியங் கடலான் மேகமுஞ் சமழ்ப்புறுங் கொடையான், பன்னும்வெங் கதிரோன் மரபில்வந் துதித்தான் பாரெலாம் புரந்தருள் வேந்தன். (௨)

அனையன்மாந் தாதா வென்பவன் பெருமா னடிமலர்க் கன்புபூண் டவனாய்ப்
புனையவாஞ் செங்கோ ணடாத்துழி வீணைப் புகழ்முனி யடைந்தன னாகத்
துனையவாங் கெழுந்து சென்றடி வீழ்ந்து துதித்துவே றாதனத் திருத்தி
நனையவா மொழியாற் பற்பல முகம னவின்றிருக் கெனவிருந் தனனே. (௩)

இருந்தவா ளுழவன் மகதியாழ் முனியே யிருங்கட லுலகிலெத் தலமும், பொருந்தநீ தெரிவா யவற்றுளுன் னினர்க்கும் போகம்வீ டளிப்பதாய்ச் சிறந்து, திருந்துமோர் தலத்தை யுரைத்தியென் றுரைப்பச் சிந்தையின் மகிழ்ச்சிகொண் டவனாய், முருந்துவா ணகையாள் பாகனை யுளத்து முன்னியம் மாதவமுனிவன். (௪)

கடல்புடை யுடுத்த குவலய வரைப்பிற் காமரு சோழநன் னாட்டு
மிடல்கெழு மிருகா விரிநதி நாப்பண் விளங்கிய மண்ணிமா நதியி
னுடல்பல திரையை யுடைத்திடுங் கோட்டி னொளிர்தரு மதூகமா வனமென்
றிடல்குறித் தவர்வாழ் மாத்தல மொன்றுண் டியம்பரும் பெருமைய ததுவே.

தழைதரு மனைய மதூகமா வனத்தைச் சார்ந்துற வசிக்கினுஞ் சார்ந்து
விழைதரப் போற்றி மீளினு மொருநாள் விரும்பியத் தலவழிச் செலினும்
பிழைதப மதூக வனமென வெடுத்துப் பேசினுஞ் சிந்தைசெய் திடினு [தே.
மழைபுரை களத்துப் பிரானருள் பெறுவார் மாறிலாத் திருவொடும் பொலிந்

MAHAMAHOPADHYAYA,
Dr. U. V. SWAMINATHAIYAR LIBRARY

சித்தநன் குவப்பத் தெளிவுசெய் பிரம தீர்த்தமென் றொருதட முளதான்
முத்தநின் றிமைக்கு மத்தடம் படியின் முன்னிய யாவையும் பெறுவார்
புத்தமு தனைய பேரருள் வழங்கிப் புண்ணிய நீலகண் டேச
ரத்தலத் தயர்வா ரப்பெய ரவருக் காயது விளம்புதுங் கேட்டி. (எ)

வானவ ரசுரர் வலியுடை யவராய் வாளமர் புரிதரக் கருதி
யூனமி லொருபாற் கடலைமுன் கடைந்தாங் குபேந்திர னொருமுனி சபிக்கப்
போனதன் செல்வ மிந்திரன் பெறுவான் பொங்குமப் பாற்கட லடைந்து
தேனக விளங்குங் கற்பக மாலைத் தேவரே சூழ்தரக் கடைவான். (அ)

மந்தரப் பொருப்பு மத்தெனக் கூட்டி வாசுகி கயிறெனப் பூட்டிச்
சுந்தர மதியைத் தூணென நாட்டிச் சுரரொடு கடையுமக் காலை
யந்தர வுலக முழுவது நடுங்க வனைவரு மஞ்சியோட் டெடுப்பக்
கந்தரப் படல மெழுந்தது பொருவக் கருவிட மெழுந்ததை யன்றே. (கூ)

கொதிகொதித் தெழுந்த கடுவிட நோக்கிக் கொண்டன்மே னியன்சுர ரோடு
மதியமைத் தொருவா வச்சமுன் றுரப்ப மதூகமா வனத்திடைப் புகுந்து
பொதிமுறுக் கவிழ்ந்த தாமரை மிசையோன் புண்ணிய தீர்த்தநீ ராடி
விதிமுறைக் கியைவெண் ணீறுடல் வயக்கி விளங்குறு கண்மணி பூண்டு. (க0)

மறைநவில் பயனே யாயவைந் தெழுத்து மனனுறப் பன்முறை கணித்து
முறையினட் டாங்க முதற்பல வாக மொழிதரு வந்தனை செய்தே
யிறையவன் றிருமு னெய்திநீ ராட்டி யிணர்மலர் பச்சிலை சூட்டிக்
குறையறப் பிறவு மியற்றுபு பணிந்து குடந்தமுற் றெதிர்நின்று துதிப்பான். ()

அறிவரும் பொருளே நின்றிரு வருளா லகிலமு நட்பதென் றுணராச்
சிறியனன் மையிலே னிருவினைப் பிணிப்பிற் சிமிழ்ப்புண்டு மும்மலத் தழுந்திப்
பொறிவழி நெஞ்சம் போதரப் புகுத்திப் புணரகங் காரமெஞ் ஞான்று
முறிதரா தெழுதல் செய்யமா ழாந்தேன் முட்டுண்டு குனிவது வழக்கம். ()

உனையடைந் தினிது பூசனை யியற்றி யுன்னரு ளிரம்புறப் பெறுது, வினையடைந் துழலும் வானவ ருடன்யான் விதிவழி மதியெனல் விளக்க, முனையடைந் திலங்குஞ் சூற்படைப் பிரானே முந்தைநாள் போன்றுபா லாழி, தனையடைந் துவந்து கடைந்தனன் வெறுக்கத் தருவிடந் தோன்ற வோட் டெடுத்தேன். (கங)

வருத்தமொன் றுற்று னின்னடி நினைப்பேன் மாறிலப் பொழுதினின் மறப்பேன், றிருத்தனே யமைந்த வுயிர்க்குண மலது செறிதர வேறுமொன் றுளதோ, கருத்தமை மயக்கு நின்பெரு மாயைக் கலப்பலாற் பிறிதிலை யுடம்பிற், பொருத்தமின் றொழுவே னடியன்மே லிரக்கம் புரிதரா தொழிகுவை யென்னின். (கச)

வரையெடுத் தெழுந்த நிசிசர னலற மலரடிப் பெருவிர லூன்றி
விரையமற் றனையான் கனிந்தினி தேத்த வேண்டிய வேண்டியாங் களித்தாய்

புரைதபுத் தடியேன் புரிபிழை மறந்து பொங்குபே ரருள்செயல் வேண்டுந்
திரையிடைப் பிறந்த கொடுவிட மடுத்துச் சிவணிய தென்செய்வ லைய. (கசு)

மறைமுதற் பொருளே வாழ்த்துவார் நிதியே மதூகமா வனங்குடி யிருந்த
நிறைபராஞ் சுடரே நின்மலக் கொழுந்தே நித்திய மோனநல் வாழ்வே
குறையறப் பணைத்துப் புடைத்திறு மாந்த குவிமுலைக் கோற்றொடிக் கொருபா
லறைதரக் கொடுத்த வருட்பெரு வாழ்வே யடியனேற் கருள்செயல் வேண்டும்.

என்றுநெக் குருகி மாயவன் றுதிப்ப வெய்திய வானநாட் டவருங்
கன்றுமுட் பதைப்பத் தனித்தனி துதித்தார் கற்பகங் காவல்செய் வேந்து
மொன்றுநெஞ் சுருகிக் கண்கணீ ரொழுக வோலமிட் டஞ்சபு துதித்தா
னன்றுநம் பெருமா னருட்குறி நின்று மவர்க்கெதிர் காட்சிதந் தருள. (கஎ)

விரைகெழு துளவோன் முதற்பல ராய விண்ணவர் தம்முக நோக்கித்
திரைகெழு விடத்துக் கஞ்சலீ ரென்றோர் திருக்கர மமைத்தொரு திருக்கை
புரைதப மலர்த்த மலரில்வண் டென்னப் போந்தது கொடுவிடங் குறுகிக்
கரையறு கருணைப் பெருங்கட லுவற் கனியென வாய்மடுத் தனனே. (கஅ)

ஆயதோர் காலை மகதியா முடையா னம்மைபா லடைந்துநின் கொழுநன்
றீயவல் விடமுட் கொள்ளுவா னெனவத் தேவியுந் தன்னொரு திருக்கை
மேயபே ரமுதம் படைத்தமைத் தடைய வெருவரல் வெருவர லென்று
நாயனார் கண்டத் தமைத்தனர் பலரு நடுங்கிய நடுக்கமுற் றொழிய. (ககூ)

அதுமுத னீல கண்டரென் றொருபே ரையர்நன் கடைந்தன ரமுது
விதுநுதல் கரத்தி லேந்தியப் பெயரே மேவினள் விண்ணவ ரோடு
மதுமலர்த் துளவோன் பணிந்தருள் பெற்று வாரிதி கடைந்துபல் வளனு[தே.
முதுபுகழ் வேந்தற் குதவிவாழ்ந் திருந்தான் மொய்த்ததன் வளம்பதி யடைந்

பின்னரம் மதூக வனத்துமால் புகுந்து பிரானடி பணிந்துநின் னிடப்பா, னன்னர்வந் துதித்தே னுதலா லிந்த நலமலி தலத்துநின் னிடப்பான், மன்னயான் விழைந்தே னென்னலும் பெருமான் வடதிசைக் கொள்ளிடக் கரையின், முன்னநீ யுறைதி யென்றனன் றிருமான் மொழியுமோர் கோயில் கொண் டமர்ந்தான். (உக)

வையக முழுதும் பொதுக்கடிந் தோம்பும் வள்ளலே மதூகமா வனத்துச்
செய்யவே ணியர்தா நீலகண் டேசத் திருப்பெய ரடைந்ததோர்ந் தனையே
வெய்யவெங் காக மொன்றவண் மேவி விடலரும் பவத்துயர் வீட்டி
யுய்யநன் கமைந்த சிவபுர முற்ற துணர்தியென் றுரைக்குமம் முனிவன் (உஉ)

நீலகண்டப்படலம் முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் - ௱அகூ.

MAHAMAHOPADHYAYA
Dr. U. V. SWAMINATHAIYAR LIBRARY,
MADRAS-41

# காகம் முத்தியடைந்தபடலம்.

ஆசிறவம் புரிசிறப்பி னமைந்தருளே யுருவாய
காசிபகோத் திரத்துதித்தான் கபிலனெனு மொருமறையோன்
பேசுபல பாதகமோ ருருக்கொண்ட பெற்றியினான்
கூசுதலி லாதென்றுங் கொடும்பழிசெய் தொழுகுவான். (௧)

புண்ணியவெண் ணீறுநுதல் பூசியறி யானுயர்ந்தோர்
கண்ணியகண் மணிமாலை கனவகத்தும் பூண்டறியா
னண்ணியவோ ரெழுத்தைந்து நாவகத்து நவின்றறியான்
பண்ணியவெந் தீவினைசால் பாவியா யுழிதருவான். (௨)

சாதுபடு வேதியர்க டமைச்சார்ந்து பணிந்தெழுந்து
கோதுதவிர் நும்பூசைக் குற்றேவல் கொண்மினென
வோதுதல்செய் தமர்ந்தமைய முறநோக்கி யிலிங்கமுதற்
காதுதல்செய் தீவினையான் கவர்ந்தொளித்து விலைசெய்வான். (௩)

பரவுசிவா லயங்கடொறும் பணிசெய்வார் போன்மருவிக்
கரவுதனிற் றண்டுலம்பால் கரும்படுகெட் டிகடயிர்தேன்
விரவுசுடர் விடுதயிலம் விரும்பியபாத் திரமாதி
யுரவுபெறக் கவர்ந்தொளித்தே யொல்லாத விலைசெய்வான். (௪)

வழிநடக்கு மவர்க்குறவு மருவினான் போற்றொடர்ந்து
மொழிவதின்வேற் றுமையறுத்து முற்றொடர்பின் மிகக்கலந்து
பழியமைய வவர்சோர்வு பார்த்துடைமை முழுவதுங்கொண்
டொழிவனெறி யாதவினைக் கொருகுழிசி யாயினான். (௫)

மிக்கபொரு ளுடையானை வேற்றூரி லுறநட்டுத்
தக்கவவர் புந்திநிலை தடுமாற வுணவருத்தித்
தொக்கபெரு வஞ்சனையாற் சோர்வுதெரிந் துறக்கவர்ந்து
பக்கநகர் புகுந்தொளிப்பான் பாதகத்திற் றலைநின்றோன். (௬)

உடலுயிர்போ னட்பினமைந் தொழுகுவார் தங்கூட்டத்
தடலுடைய கூற்றுவன்போ லடைந்தவரை வேறாக்கி
மிடலுடைய பலவழக்கு விளைத்தொருபொய்ச் சான்றேறிப்
படலுடைய பொருள்விளைப்பான் பழிபாவங் கொலையஞ்சான். (௭)

எயுமொளி யுடைப்பொன்னை யிரதத்தா லுருமாற்றிக்
காயுமழ விட்டெடுத்துக் காட்டிநாங் குருமுடிக்கப்
பாயுமொளி யித்துணைப்பொன் வேண்டுமெனப் பகர்ந்தவர்நன்
கீயுமெனக் கொண்டொளிப்பா னின்னுமிவன் செயலனந்தம். (௮)

இவ்வாறு முயன்றீட்டு மிரும்பொருளெ லாங்கொடுபோய்
வெவ்வாளொண் கருநெடுங்கண் விலைமாதர் பாற்கொடுத்துத்
தெவ்வாத வவர்போகந் திருந்தநுகர்ந் தொழுகுமோ
ரொவ்வாத நெறிநின்றா னுண்மைசிறி துணராதான். (௯)

பெருகுமுலோ காயதப்பேய் பிடித்தலைப்ப விவ்வாறே
கருகுகுழல் விலைமாதர் கலப்பிடைநின் றகலானா
யுருகுமனத் தொடுபயினா னுறுகாமந் தலைசிறப்ப
முருகுமது வுண்டுவந்தான் முதுபழையர் சேரியிற்போய். (௧௦)

கள்ளுண்டு தேக்கெறிந்து கடைவாயி லீமொய்ப்பத்
தள்ளுண்டு வருமறையோன் றவாதவழுக் குடைநாற
வெள்ளுண்டு திரிபுலைச்சி யெதிர்ப்பட்ட வொருத்திதனை
யுள்ளுண்டு பயில்காம முறப்புணர்ந்தா னொருதினத்தில். (௧௧)

பொல்லாத விழிபுலைமை புணர்ந்துதிரி கொடியோனை
யொல்லாத புரிபவனிவ் வூர்நின்று மொழிகவெனக்
கல்லாத மாந்தரொடு கற்றோரும் விராய்த்துரப்பப்
புல்லாத பெருங்கானம் போயொளித்தான் புகலில்லான். (௧௨)

கடுங்கானிற் புக்கொளித்துக் காய்பசியா லறவருந்தி
யொடுங்காத பலபிணியு மோவாம லுடற்றியெழ
நெடுங்கால முழிதந்து நெடுந்துயிலுற் றானடைந்த
கொடுங்கால படர்பாசங் கொண்டியாத் தனரலைப்பார். (௧௩)

தலைதகர்ந்து பொடியாகத் தண்டத்தான் மொத்தியுமெய்
நிலைகுலைந்து சோர்ந்துவிழ நெட்டிலைவே லாற்பொதிர்த்து
மலைபுரிந்து பற்றகா வறைந்துசினந் துதைத்திழுத்து
மலைபடுந்தோ ளனையவரிவ் வாறுபல துயர்விளைத்தார். (௧௪)

தாம்புரியப் படுமியவைத் தண்டமெலா முறப்புரிந்து
பாம்புசினந் தெனச்சீறிப் பாதகனைக் கொடுபோகித்
தேம்புதலெய் துறவிடுத்தார் செய்யகோற் கடவுண்முன
மோம்புமுறை யவன்காணூஉ வுறுதழலின் மிகக்கனன்று. (௧௫)

செய்தபா தகமனைத்துந் தெரிவிப்பா ராற்றெரிந்து
வெய்துதீ யெனக்கொதித்து வெய்யபா தகனிவனைக்
கொய்துதசை யழலிட்டுக் குருதியெழப் புடைத்துரப்பி
யெய்தெறிந்து புரிவனசெய் திடுங்கொடிய வளற்றென்றான். (௧௬)

புத்தியெனப் புறம்போந்து புகலரிய பாவிதனைச்
சத்திகொடு மெய்துளைத்துத் தழல்படுநெய் மிடாவிட்டு
மெத்திநடு மிருப்பாலை யிடைக்கரும்பி னிட்டரைத்துங்
கொத்திமிகு பறவையுணக் கொடிதாய விடத்துய்த்தும். (௧௭)

அடிசிலிலை யுண்ணியவென் றடர்பல்வீப் புழுவிட்டுங்
கடிதறனுண் டிடுகென்று கசியுமுடைச் சீவார்த்துங்
கொடிறுடையக் கரமுட்டி கொடுதகர்த்தும் பல்லுடைத்துந்
தடியரிந்து வாய்க்கொடுத்துந் தழல்வடுநீர் வாய்ப்பெய்தும். (௧௮)

ஊசிகுறி யிடைச்செறித்து மொள்ளியகண் களிற்செறித்து
மேசியழ விடையுருக்கு மீயநீ ரிடைத்தோய்த்தும்
பேசிமுடி வரியதுய ரிவ்வாறு பெருக்கியபின்
வீசியழல் படுகும்பி வீழ்த்தினார் தலைகவிழ. (௧௯)

உள்ளவள றத்தனையு மொன்றொழியா வகைபுகுத்தக்
கள்ளநெடும் பாவமெலாங் கழிதரப்பன் னாளுகர்ந்து
மெள்ளநில வுலகினிடை மேவிமல சூகரமாந்
தள்ளரிய பிறப்பைந்து சார்ந்துபெருந் துயருற்றான். (௨௦)

பின்னர்நா யுருவெடுத்தான் பெருங்குரல்செய் கரமானான்
வன்னநகு லமுமானான் வாயூளை நரியானா
னென்னவிழி பிறப்புமடைந் திவ்வாறே யுழிதருவா
னன்னமலி புனனாட்டோ ரருங்காகப் பிறப்புற்றான். (௨௧)

காகவுருக் கொண்டுழல்வான் கழிபலமுற் பிறப்பிடைத்தோம்
போகவரு மெப்பவத்துப் புரிதருபுண் ணியங்கொல்லோ
மேகமுறைந் திடநிவந்து மிகக்குளிர நிழல்விரிந்து
மாகநவின் றிடவிளங்கு மதூகவனத் திடைப்புகுந்தான். (௨௨)

மன்னியகார்த் திகைமாத மதிவாரப் பெருந்தினத்து
முன்னியவன் பினர்கூடி முன்னவனார் பெருங்கோயின்
மின்னியபஃ றீவமொடு விரும்புபல பணிபுரிவார்
துன்னியமெய்ப் பத்தியொடு சூழ்பிரதக் கணம்புரிவார். (௨௩)

பிரமதீர்த் தம்படிந்து பிறங்கியவெண் ணீறணிந்து
புரவமர்கண் மணிமாலை சென்னிமுத லுறப்புனைந்து
பரவுறுமைந் தெழுத்தெண்ணிப் பரமனா ரெதிர்வந்தே
யரகரவென் றொலித்திருகை யதிர்த்துநட னம்புரிவார். (௨௪)

மல்லிகைமுற் பலமலரும் வளங்கொடளிர்க் கூவிளமுஞ்
சொல்லியதூ வக்கதையுந் தூவியருச் சித்திடுவா
ரெல்லையிலான் பாலாதி யேய்ந்ததிரு மஞ்சனங்கொண்
டொல்லையவ ணூற்றிடுவா ருற்றபலர் சூழ்பொழுது. (௨௫)

இருப்பைமர மேலிருந்த விழிகாக மெம்பெருமான்
விருப்பமிகு சந்நிதிநேர் மேவியொரு தகளியிடை
யுருப்பமிகு சுடர்விளங்கா துறங்கவதி னெய்கவர்வான்
கருப்பாவு கடுமூக்கு வைத்ததுமண் ணவர்காண. (௨௬)

முனையலகு வைததெடுக்க முயன்றதுதூண டுறுகோலா
வனையசுடர் விளங்கியெழ வதுகண்டு பெருமானா
நினைவரிய மகிழ்ச்சியராய் நீடுழலுங் கருங்காக
மினைவரிய பேருணர்ச்சி யெய்தவருள் செய்தனரே. (௨௭)

வானமுழு வதுங்காதத மணிகண்டா பேரருளா
லானநய வுணாவுற்ற வககாகம பிரமதடத
ஞானமிலவண் புனன்மூழ்கி யோங்குசின கரஞ்சூழ்ந்து
கானமுரு தடியேனைக் காகாவென் றுறககரையும். (௨௮)

சின்னாளிவ் வழிபாடு செய்தபடி யொருதினத்து
மின்னாசெஞ் சடைப்பெருமான் விருமபுறுபே ரருள்பெற்றுப்
பன்னாணின் றருநதவஞசெய பண்பினரு மணுகரிய
பொன்னாவண சிவலோகம புககதுசே வுருவெய்தி. (௨௯)

வையமுழு வதுமபோற்று மணிகண்டப் பெருமானா
செய்யதிரு வருளடைந்த சிறுகொடியின் காதையிது
வெய்யமறை யவனிவன்போன் மேவியுளான் மறறொருவ
னையவவன் சரிதமுஙகே ளென்றறையும யாழமுனியே. (௩௦)

காகம் முத்தியடைந்தபடலம் முற்றிற்று.

ஆகததிருவிருத்தம - ௪௧௧.

---

# கருமசேனன் முத்தியடைந்தபடலம்.

சீததி சாலகட
கோததி ரததினன்
சாததி ரமபல
பாரதது ணாந்தவன். (௧)

கரும சேனனென்
றுரைசெய் நாமததான்
பொருளி னாகிய
பெருகு மாவததான். (௨)

கூலி வாஙகியே
சாலு மாமறை
நூல்க ளோதுவான்
சீல மோரகிலான். (௩)

மடிவி லாவினை
நெடிகி யறறவு
முடிவி னூழினன்
மிடிய கன்றிலான. (௪)

வறுமை வாட்டிட
வெறுமை யெய்தியே
பொறுமை கொணடிலா
னுறுமை நெஞ்சினன். (௫)

அனையன் வைகுமா
மனையொர் வேதியன்
றனைய டுதுளா
னினைவு முற்றவே. (௬)

அன்ன வன்னிவன்
றன்னை நோக்கியே
பொன்னை நேடினே
னென்ன செய்குவேன். (எ)

விருத்த யாக்கையேன்
றிருத்த யாத்திரை
பொருத்த மின்மையே
னருத்தி மேவினேன். (அ)

என்று கூறலு
நன்று நன்றெனு
மொன்று பேசுவான்
சென்று கூறுவான். (கூ)

உங்கள் பேரினாற்
கங்கை யாடினான்
றிங்க ளாறினி
லிங்கு மேவுவேன். (க0)

தக்க பொன்றரி
னிக்க ணஞ்செல்வே
னக்க னென்றனன்
மிக்க வன்பொர. (கக)

அனைய வார்த்தைகேட்
டனைய வேதிய
னனைய நீர்படிந்
தனைய னாகியே. (க௨)

செம்பொ னாயிர
நம்பி யீந்தனன்
வம்பன் வாங்கியே
கம்ப மில்லனாய். (கங)

அன்ன மாநிதி
தன்ன தாக்கினான்
பின்னர் மேவுத
றன்ன மோர்கிலான். (கச)

படியி டத்திலிப்
படி வினைத்திறம்
படிய றச்செயும்
படிய னாயினான். (கரு)

இன்ன திமைகண்
மன்ன மேவலா
லன்ன வேதிய
னின்னன் மூழ்கினான். (கசு)

குட்ட நோய்முத
லொட்ட வாடினா
னிட்ட நான்முறை
விட்ட பாவியே. (கஎ)

இளைத்துச் செத்தபின்
வளைத்துத் தூதுவர்
துளைத்துக் காலன்முன்
விளைத்து விட்டனர். (கஅ)

சீறி மற்றவ
னீறி லாநர
கூறு மேவியே
பாறு மாவிட. (ககூ)

ஆங்கு வெந்துய
ரோங்கு தீவினைத்
தீங்கு தீர்ந்தபின்
வேங்கை யாயினான். (௨0)

புலியு ருக்கொடு
வலிய பூமிமே
னலித ரச்சுழன்
மெலிவி லாதவன். (௨க)

எவ்வ றத்தினோ
செவ்வி யார்பயி
னவ்வி யங்கையார்
தெய்வ மாத்தலம். (௨௨)

ஆம தூரகன்
னாம வைப்பிடைக்
காம முற்றன
னேம மெய்துவான். (௨ங)

இரைவி ரும்பியப்
புரைவ னந்தனை
வரைவி லாதுசூழ்ந்
துரைசெய் வெம்புலி. (௨ச)

உயிரி றந்திடப்
பெயர்த ராவல
மயர்த ரும்புலிச்
செயல மைந்ததால். (உரு)

இறப்பு மத்தலத்
துறப்பு குந்திட
வறப்பெ ருந்தகை
மறத்தி னீக்கினான். (உசு)

நீல கண்டன்செய்
சீல நல்லருள்
சால வேற்றுவான்
கோல மார்ந்தனன். (உஎ)

தேவ னனவன்
மூவர் தம்பிரான்
மேவு லோகத்தி
லியாவ ருந்தொழ. (உஅ)

சென்று வாழ்ந்தன
னன்று யாவருங்
குன்ற வில்லிசீர்
நன்று போற்றினார். (உகூ)

இன்னு மத்தல
மன்னு காதைகள்
பன்னின் மிக்குள
மன்னர் மன்னனே. (௩0)

என்று யாழ்முனி
யன்று ரைத்தன
னென்று கூறினான்
வென்ற சூதனே. (௩க)

பின்ன ரென்செய்தான்
மன்ன னென்றவ
ருன்ன றேர்ந்திது
பன்னுஞ் சூதனே. (௩உ)

கருமசேனன் முத்தியடைந்தபடலம் முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் - சஙக.

# மாந்தாதா பூசைப்படலம்.

உளமகிழ் நாரத முனிவார்த்தை
யளமரன் மனமொழி தரக்கேளா
வளமலி பெரும்புகழ் மாந்தாதா
தளர்வொழி தரவெழுந் தனன்மாதோ. (க)

மந்திர கலைபல வல்லார்க
டந்திர வதிபர்க டாஞ்சூழச்
சந்திர னிகர்குடை நிழல்செய்ய
வெந்திர விரதமி சைக்கொண்டு. (உ)

மழைமத கரிபரி வாள்வீர
ருழைவலை தரவிய மொலிசெய்யத்
தழைதரு மாகதர் தாம்வாழ்த்தக்
குழைதரு சாமரை புடைதுள்ள. (௩)

குன்றமு மருதமுங் கொடுங்கானும்
பின்றவிர் தரவிளை தரும்பெற்றி
யொன்றவத் தடைந்தன னுறக்கண்டா
னன்றமை தருபுன னன்னாடு. (௪)

கரும்புகள் கழுகெனக் கதித்தோங்கச்
சுரும்புகள் பன்மலர் மிசைவாவப்
பெரும்புயல் பொழிறவழ் வளஞ்சான்ற
விரும்புன னாட்டணி பலநோக்கி. (௫)

மனமகிழ்ந் திறையவ னடமாடு
மனகநல் லம்பல மவிர்தில்லை
கனமுரி ஞ்சியவுயர் மதிற்காழி
பனவர்த மறையொலி யெழுபுள்ளூர். (௬)

இறையவன் மருவிய திருப்புன்கூர்
மறைபொலி வாளொளி புற்றூர்முற்
கறைமிடற் றவனமர் தானங்கண்
முறைமையிற் கனிவொடு பணிந்தேத்தி. (௭)

எண்ணிய வெண்ணிய படியருளுந்
தண்ணிய பேரருள் குதிகொள்ளும்
புண்ணிய மல்கு மதூகஞ்சார்
மண்ணிய படிக்கரை வந்துற்றான். (௮)

வடதிசை மன்னிய காவேரித்
தடநதி மூழ்குபு வந்தொன்று
ரடறபு வேலவ னுலாய
விடர்தபு மண்ணியின் மூழ்குற்றான். (௯)

பிரம னமைத்த பெருந்தீர்த்தம்
வரமுற வாடுபு வெண்ணீறு
விரவுறு கண்டிகை மெய்த்தாங்கி
யரகர வென்றெழுத் தைந்தெண்ணி. (௧௦)

மன்னிய கோயில் வலஞ்செய்து
மின்னிய செஞ்சடை யார்முன்பு
துன்னிய நெஞ்சுரு கத்தாழ்ந்தான்
பன்னிய மெய்ப்புகழ் மாந்தாதா. (௧௧)

மதிதவழ் கோபுர மதில்யாக
விதிபயில் சாலைம டைப்பள்ளி
நிதிநிகர் சூழுறை வார்கோயில்
பதிதரு மண்டப முதல்யாவும். (௧௨)

இலமற நன்கு புதுக்கிச்சீர்
நலமிகு பொற்பணி முதனலகிப்
பலரு முவப்ப விழாச்செய்து
குலமறை யோர்முக வியாமொள்ள. (கங)

கலைபுக ருண முவர்நீந்து
நிலையமை மையவரு மகிழ்கொள்ள
வலையில தாயபல் லபிடேகந்
தொலைவில தெனவெடுத் தினிதாட்டி. (கச)

நெய்தவழ் போனக முதலாய
வெய்தரும் யாவையு மினிதூட்டிக்
கைதரு முகமனுள் ளனவெல்லாஞ்
செய்தபின் றுதிமொழி புரிகிற்பான். (கரு)

புண்ணிய வானவர் போரேறே
யெண்ணிய வன்பர்த மிறையோனே
நண்ணிய வினைசுட நலிநாயேன்
றண்ணிய நின்மலர்த் தாடொழுவேன். (கசு)

பற்றிலர் பற்று பரஞ்சோதி
கற்றில ரென்றுங் காணறியாய்
புற்றில வாளரப் பூணுடையாய்
மற்றிலங் குன்மலர்த் தாடொழுவேன். (கஎ)

மங்கள நாயகி மணவாளா
கொங்கலர் கொன்றையஞ் சடைக்கூத்தா
செங்கண வேந்திய கரத்தாய்நின்
பங்கயத் தாண்மலர் பரசிடுவேன். (கஅ)

வடிவமொ ரைந்துடை மாமணியே
பொடியணி மேனியென் புண்ணியனே
கடிகமழ் கொன்றையங் கண்ணியனே
யொடிவறு நின்பத முன்னுகின்றேன். (க௯)

வானம் விராவு மதூகவனத்
தானம் விராவிய சங்கரனே
யூனம் விராவுத லோய்தரநின்
கானம் விராங்கழல் கைதொழுவேன். (உ0)

அரியய னாதியர் காணரியாய்
விரியுல கெங்கும் விராயவனே
கரியுரி போர்த்திய கண்ணுதலே
பரிபுர நின்கழல் பற்றிடுவேன். (உக)



MAHAMAHOPADHYAYA
... SWAMINATHAIYAR LIBRARY

என்று துதித்திடு மேந்தறனை
நன்று மகிழ்ந்தன னம்பெருமா
னென்று மகப்பெறு வாஞ்சையினாற்
கன்று மனத்தொடு சார்ந்தனையால். (உஉ)

எய்துவை யன்னது வேண்டியதென்
செய்தவ மன்னவ வின்னுமெனப்
பொய்தவிர் சேவடி போற்றியெழாக்
கைதவ மில்லவன் கட்டுரைப்பான். (உ௩)

செய்யகண் மாறெரி யாமலர்த்தா
ளையவ ளித்திட வேண்டுமெனப்
பொய்யக லீற்றி னுறப்பெறுதி
மெய்யசெல் கென்று விடுத்தனனே. (உ௪)

விடைகொடு வேந்தர்தம் வேந்தனெழாப்
புடைகெழு தம்படை சூழ்வரப்போ
யடையல ரஞ்சு நெடும்புரிசை
நடைகெழு தன்பதி நண்ணினனே. (உ௫)

இறைவ னளித்த வரப்படியே
குறைவில் குணப்புதல் வற்பெற்றுப்
பொறைநில மற்றவன் மேல்வைத்து
நறைகமழ் பொற்பத நண்ணினனால். (உ௬)

மண்ணிப் படிக்கரை வாழ்பெருமா
னெண்ணில் சரிதிர மின்னுமுள
வொண்ணுவ தோசொல வோர்மினெனப்
புண்ணியச் சூதன் புகன்றனனே. (உ௭)

மாந்தாதாபூசைப்படலம் முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் - ௪௭௮.

# தலவிசேடப்படலம்.

நடலையில் சூத மேலோ னைமிச வனத்து வாழு
மடல்வலி முனிவர் தம்மை யன்பினா னோக்கி மீட்டும்
விடலருந் தலவி சேட மேன்மையு மளவின் றுரு
முடலமை பயனுச் சில்ல வுணர்த்துமென் றுரைக்க லுற்றான். (க)

காசிமந் தரங்கே தாரங் காளத்தி காஞ்சி யொற்றி
மாசிலா முதுகுன் றண்ணு மலைநெடுந் தில்லை காழி
பேசிய கூடல் சேது முதற்பெருந் தலங்கட் கெல்லாம்
பாசிலைத் தடஞ்சூழ் மண்ணிப் படிக்கரை விசேட மாகும். (௨)

ஐவகை யுருவந் தோற்றி யமலனு ருறையா நின்ற
மெய்வகை யத்த லத்தி னெல்லையை விரும்பிச் சூழ்வோர்
பொய்தவிர் புரவி மேதம் புரிபய னடியோ ரொன்றற்
கெய்துவ ரென்னிற் கூற வேண்டுவ தினிமற் றென்னே. (௩)

பிரமதீர்த் தத்து நன்னூல் பேசிய விதியான் மூழ்கிப்
பரமனுர் மரீஇய மண்ணிப் படிக்கரை வசிப்போர் யாரு
முரவுநீர்க் கங்கை மூழ்கி யொள்ளிய காசி மேவ
விரவுமா பயனின் மேலாம் பயன்விழைந் தடைவ ரன்றே. (௪)

மழைபுரை களத்து முக்கண வானவர் பெருமான் றளே
விழைதரு மறையோர் மற்றை மெய்யடி யவர்யா ரேனும்
பிழைதப வொருவ ரோர்போழ் துணவமு திடுவே ரளர்
பழையவண காசி யோரா யிரர்க்கிடு பயன் கிடைப்பார். (௫)

மறையவா தமக்கோ ரில்ல மறைமுதல் கோயி லேவற்
றுறைபுரி பவர்க்கோ ரில்லந் துகளிலத் தலத்து மேவ
நிறைதர வியற்றி நல்கு நிறையுடை யவரெஞ் ஞான்றுங்
கறைதபு கயிலா யத்திற் காணிகொண் டிருப்பர் மாதோ. (௬)

அடிக்கரை யிடிக்கும் வேலை யுடுத்தகா சினிகொண் டாடும்
படிக்கரைப் பெருமான் கோயிற் பகரொரு தீப மிட்டோர்
முடிக்கரை மதியுஞ் சூடி முண்டகத் தோர் விழியுந் தாங்கி
வடிக்கரை முனைச்சூ லேந்தி வாழுவா சிவலோ கத்தே. (௭)

படிக்கரை நாத ராதி யைவர்தம் பரவு வேணி
முடிககணி யாகு மாறுந் தேவியர் முடிக்கு மாறுங
கடிப்புத லமைந்த நந்த வனங்கமழ் தரச்செய் வோர்கண
மிடிக்கட லமுந்தா தின்ப வெள்ளத்து ளழுந்து வாரே. (௮)

சினகரம புதுக்கு வோரும் பாத்திரந் திருத்து வோரு
மனனெக வணிபூ ணுடை மற்றுள வழங்கு வோரு
மனகநற் றிருவி ழாவை யலஙகரித திடுநல் லோரு
முனமுற வளவில் போக வாரியுண் மூழ்கி வாழ்வார். (௯)

குடம்படு செருத்த னல்லான் பொழிந்தபால் குளிர வாட்டி
யிடம்படு சுவைய நெய்பால் கலந்தவின் னடிசி லூட்டிப்
படம்படு பணிப்பூ ணைங்கள் படிக்கரை நாதற் றூழ்வோர்
மடம்படு வினையி னீந்தி வையக முழுதாள் வாரால். (௧௦)

காலையி லறமுண டாகுங காஞசன முசசி யுணடா
மாலையி லினப மூணடா மததயா மதது மனனு
நூலைமுற றுணாநது ளாரும பெறலரு நுவலா வினபம
பாலைவென மொழியாள பாகப பரமனைத ாரிசிப பாாககே. (௧௧)

சென றுகண டிடிறசா லோகஞ செனனிதாழத திடிறசா மீப
நனறுசூழ தரிறசா ரூப நைநதுநைந தருகி யுளள
மொனறுறத தூரிததல செயயி ஞேஙகுசா யுசசி யநதான
மனறுணின ருமி மணணிப படிககரை வாழவை மாதோ. (௧௨)

பயமிக வருஞ மணணிப படிககரைப பெருமான பொறறு
ணியமநல லொழுககம பூணடு நிததலுந தரிசித தேததி
யியலுவ வுதவி செயதத ரலததிடை யிருககப பெறறோா
பெயாரும பெருமபே றெமமாற பேசலாந தகைமைத தாமோ (௧௩)

வளைசிலை மலையாக கொணட படிககரை மாதே வாககு
விளைநில முதவு வோரும விரிபொரு ளுதவு வோருந
தளையவிழ கறப மாலை தடமுடி வேயநது வாழநது
களைமிகு சிவலோ கததிற கடைமுறை மருவு வாரே (௧௪)

படவா வணிநத வேணிப படிககரைப பெருமான றனனைக
கடவுளா போறறு நீல கணடநா யகனை மறறை
யிடாதபு மூவ ராய விலிஙகமூாத திகளை நாளு
முடனுறை தேவி மாரை யுளளததி னொருமை பூணடு (௧௫)

நிததலுங காலந தோறுஞ சேவிககு நியமம பூணக
வததகு நியம மொலலா தாயினமா லையிறபோயக காணக
வுசதம வதுவு மொலலா தெனனினென சோம வாரம
விததக மாநத தோறற மாதியின மேவிப போறற (௧௬)

அன்னது மொலலா தெனனி னமாதிரு விழாநாட சென்று
பனனரு மனபு பொஙகப பததியி னிறைஞசல செயக
சொனனது மொலலா தெனனிற றொழுதுவந தாரை நாடி
யுனனரும பூசை யாறறி யுரிமையிற போறறி செயக (௧௭)

அனையது மொலலா தெனனி னததகு தலபு ராணம
வினைதப விருமபிக கேடடு மேவுறு பத்தி செயக
வினையது மொலலா தெனனி னிதயததிற றியானஞ செயக
நினைவரும பிறவி நீநதி நிகரிலின படைவோா யாரும. (௧௮)

மலைசிலை வளைததாா மணணிப படிககரை மருவு வாாககுத
தலைமைசா லனையாா கோயிற றிரவியஞ சமையக கொளளும
புலைசெய்பா தகமொன் றனறிப பூதலத தளவி லாத
கொலைசெயபா தகமுன் யாவுங கழிநதுபோங கூற லெனனே. (௧௯)

நினைபவ ரென்று மண்ணிப் படிக்கரை நினையல் வேண்டும்
புனைதரப் புகல்வா ரந்தத் தலத்தையே புகலல் வேண்டும்
வினைசெயப் புகுவா ராண்டே விருப்பொடு செய்யல் வேண்டும்
வனைதரு மதூதா னிம்மை மறுமையுங் கொடுக்கு மாற்றால். (௨௦)

ஆதலின் முனிவீர் மண்ணிப் படிக்கரை யதற்கொப் பான
மேதகு தலமற் றுண்டோ வென்னதன் மேன்மை முற்று
மோதல்செய் திடவல் லார்யா ருணர்மினென் றுரைத்தான் சூத
மாதவ னிதுகேட் டின்ப வாரியிற் குளித்தார் யாரும். (௨௧)

உரைசெயிப் புராணந் தன்னை யுண்மையிற் படிப்போர் கேட்போர்
வரைதல்செய் திடுவோர் பூசை வயங்கிடச் செய்வோர் யாருந்
தரைமிசை மனைவி மக்க டமரெலாஞ் சூழ வாழ்ந்து
விரைநறுங் கடுக்கை வேணி விமலர்தா ளடைவ ரீற்றில். (௨௨)

பண்ணிய தவத்தான் மிக்க பரவுமோன் சைவம் வாழ்க
கண்ணிய வமுத கும்பங் கையுளாள் கருணை வாழ்க
வெண்ணிய தெய்வ மண்ணிப் படிக்கரை யென்றும் வாழ்வோன்
புண்ணிய மன்று ளாடும் பூங்கழல் வாழ்க வாழ்க. (௨௩)

தலவிசேடப்படலம் முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் - ௱௦௧.

---

மண்ணிப்படிக்கரைப்புராணம் முற்றிற்று.

---

MAHAMAHOPADHYAYA
DR. U.V. SWAMINATHA IYER LIBRARY
MAHAMAHOPADHYAYA
DR. U.V. SWAMINATHA IYER LI